Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 தை 16 வெள்ளிக்கிழமை (30.01.2015) | பக்கங்கள் 20 | ஓசை - 122

# சலுகைகள் நிறைந்த பட்ஜட்



- ★ ஓய்வூதியம் அதிகரிப்பு
- ★ அத்தியாவசியப்பொருள் விலை குறைப்பு
- ★ சமுர்த்தி கொடுப்பனவு இரட்டிப்பு
- ★ கர்ப்பிணிகளுக்கு 20 ஆயிரம் ரூபா
- ★ விவசாய கடன் 50 வீதம் தள்ளுபடி
- ★ மஹாபொல கொடுப்பனவு அதிகரிப்பு

(கொழும்பு)

**புதிய அரசின் இடைக்கால வரவு செலவுத்திட்டம் நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. சாதாரண பொது மக்கள் தொடக்கம் கைத்தொழில் வர்த்தக நிறுவனங்கள் வரை அனைத்து தரப்பினருக்கும் சலுகைகள் பல வழங்கும் வகையிலான இந்த இடைக்காலவரவு செலவுத்திட்டத்தை பலத்த கரகோசத்தின் மத்தியில் நிதியமைச்சர் ரவிகருண நாயக்கா நேற்று நண்பகல் நாடாளுமன்றில் சமர்ப்பித்தார்.**

அனைத்து தரப்பினருக்கும் சலுகைகள் பலவற்றை அள்ளி வழங்கியிருக்கும் இந்த இடைக்கால வரவு செலவுத்திட்டத்துக்கு அனைத்து மட்டங்களிலும் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.

பதின் மூன்று அத்தியாவசிய பொருட்களுக்கு விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. ஓய்வூதியக்கொடுப்பனவு அதிகரிக்கப் பட்டுள்ளது. அரச ஊழியர்களுக்கு 5000 ரூபா சம்பள அதிகரிப்பு மற்றும், சமுர்த்திக்கொடுப்பனவு இரட்டிப்பு, கர்ப்பிணிகளுக்கு 20,000 ரூபா கொடுப்பனவு, விவசாயக்கடனில்50 வீதம் தள்ளு படி, வாகனவரி குறைப்பு, அடகு நகைகளுக்கு வட்டி தள்ளுபடி, மஹாபொல கொடுப்பனவு அதிகரிப்பு ஆகியன உட்பட மேலும் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

நாட்டு மக்களுக்கு ஆகக்கூடுதலான சலுகைகளையும் நிவார ணத்தையும் வழங்கும் வாய்ப்பை இந்த இடைக்கால வரவு செலவுத்திட்டம் வழங்கியுள்ளதாக நிதி அமைச்சர் ரவிகரு ணநாயக்க இந்த வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து உரையாற் றுகையில். தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது.

இலங்கையர்களுக்கு ஆகக்கூடுதலான நிவாரணம் வழங்கும் சந்தர்ப்பமாக இது அமையும். எமது இனத்துக்கு கௌரவமாக சேவையளிப்பதே எங்கள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## படைவசமுள்ள காணிகள் மீளளிக்க நடவடிக்கை

### அமைச்சர் ராஜித தகவல்

(கொழும்பு)

வடக்கில் அனாவசியமாக படை யினர் வசம் உள்ள காணிகளை யும் வர்த்தக நடவடிக்கைகளுக் காக கையகப்படுத்திய காணி களையும் மீண்டும் பொதுமக்க ளிடம் வழங்குவதற்கு அரசு நட வடிக்கை எடுத்துள்ளதாக அமைச ்சர் ராஜித சேனாரட்ண தெரிவித் துள்ளார்.

வடமாகாணத்தில் இராணு வத்தினரிடம் உள்ள தனியார் நிலங்களை ஒப்படைப்பதற் கும்,அரசியல் கைதிகளை விடு தலைசெய்வதற்கும் புதிய அர சாங்கம் எண்ணியுள்ளதாக அமைச சரவை பேச்சளார் ராஜித சேன

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஆட்சியைக் கவிழ்க்கும் சூழ்ச்சி வழக்கு பதிய சாட்சியம் இல்லை

அலரி மாளிகையில் தேர்தல் தின இர்வு இடம்பெற்றதாகக் கூறப்படும் சூழ்ச்சிக்குற்றச்சாட்டு குறித்து பிரதான சந்தேகநபர் களிடம் குற்றப் புலனாய்வுப் பிரி வினர் விசாரணை நடத்தியுள்ள போதும் சம்பவம் குறித்து குற்ற வழக்கு பதிவு செய்ய போதிய ளவு சாட்சியம் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ்மா அதிபர், இரா ணுவ தளபதிகள், பிரதமர நீதிய ரசர், ஜீ.எல்.பீரிஸ், உதய கம்மன பில, சட்டமா அதிபர் ஆகியோ ரிடம் குற்றப் புலனாய்வு பிரி வினர் வாக்குமூலம் பெற்றுள்ள னர். சட்டமா அதிபர் தவிர்ந்த அனை வரும் சூழ்ச்சி இடம்பெறவில்லை என்றே தெரிவித்துள்ளனர்.

ஜனவரி 9ஆம் திகதி அதி

(19) ஆம் பக்கம் பார்க்க

## பொது நலவாய பிரதிநிதிகள் வடபகுதிக்கு விஜயம்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் குழு நேற்று விஜ யம் ஒன்றினை மேற்கொண்டு கிளிநொச்சிக்கு சென்றன. நண்ப கல் 12 மணியளவில் குறித்த குழு வினர், கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் இடம்பெற்றுவரும் மனித நேய கண்ணிவெடி அகற் றும் செயற்பாடுகள் தொடர்பாக பார்வையிட்டதுடன், குறித்த செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவன அதிகாரிக ளுடன் கலந்துரையாடலிலும் ஈடு பட்டனர். கிளிநொச்சி விஜயத் தினை தொடர்ந்து குழுவினர் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்தனர். (29)

## ஐ.நா.வுடன் ஒத்துழைக்க தயார் ஜெனிவாவில் ஜயந்த தனபால தெரிவிப்பு

ஜனாதிபதியின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான சிரேஸ்ட ஆலோசகர் ஜயந்த தனபாலவிற்கும் ஐக்கிய நாடுகள். மனித உரிமை ஆணையாளர் நாயகம் செயித் ராஅத் அல் ஹுஸை னுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜெனிவாவிற்கு விஜயம் செய்திருந்த ஜயந்த தனபால மனித உரிமை கவுன்ஸில் குழு உறுப்பினர்களுடனும் சந்திப்பு நடத்தியுள் ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஜி.எஸ்.பி. வரிச்சலுகை மீண்டும் கிடைக்க வாய்ப்பு

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலு கையை மீண்டும் பெற்றுக்கொள வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தினை முன்வைத்து உரை யாற்றுகையிலேயே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

கடந்த அரசாங்கத்தில் இழக் கப்பட்ட ஐரோப்பாவின் ஜி.எஸ். பி.பிளஸ் வரிச்சலுகையை மீண் டும் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் நிதி அமைச்சர் கூறினார்.

## பிரித்தானிய அமைச்சர் யாழ்.விஜயம் தற்போதைய நிலைவரம் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

பிரித்தானியாவின் வெளி விவகார இணை அமைச்சர் ஹியூகோ. சுவைர் நேற்று யாழ்ப் பாணத்துக்கு விஜயம் செய்தார் வடக்கின் இன்றைய நிலைவரம் குறித்து அவர் பல தரப்பினரை யும் சந்தித்துக் கலந்துரையாடி னார்.



பிரித்தானிய வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியக இணை அமைச்சர் ஹியூகோ சுவைர் நேற்று காலை விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்ததும் முதலில் முதலமைச்சர் விக்னேஸ்வரனைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக கருத்து வெளியிட்ட, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன்,

ஆட்சிமாற்றத்துக்குப் பிந்திய நிலைமை எவ்வாறு உள்ளது என்பதையும் வட மாகாணத்தில்

(20) ஆம் பக்கம் பார்க்க

## பல்கலைக்கழகங்களுக்கு இனி அதிக அதிகாரங்கள்

பல்கலைக்கழகங்களுக்கு அதிகாரங்களை வழங்கும் வகையில், சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ள எண்ணியுள்ளதாக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரி வித்துள்ளார்.

இதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கான குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப் பிட்டுள்ளார். அதேவேளை இது தொடர்பான கருத்துக்களை மாணவர்கள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பலரிடம் கேட்டறிய வுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# இளைஞர் தேசிய இயக்கத்தின் யாழிற்கான அங்குரார்ப்பண நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

ஒரு சமூகத்திற்காகவோ குறிப்பிட்ட ஒரு அரசியலுக்காகவோ இளைஞர்களின் சக்தியை பயன்படுத்தாது நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்தும் 'த சேஞ்' காலமாற்றத்தின் இளைஞர்களின் சக்தியூடாக ஒரு கூரையின் கீழ் இணையும் தேசிய இளைஞர் இயக்கத்தின் யாழ்ப்பாணத்திற்கான அங்குரார்ப்பண கலந்துரையாடல் எதிர்வரும் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக தேசிய இளைஞர் இயக்கத்தின் செயலாளர் ஷியாகுல் ஹஸன் ரவூப் தெரிவித்தார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சாதி, மத, இனம், மொழி, கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டு இளைஞர்களின் சக்தியை ஒரே நோக்காகக் கொண்டு எல்லா சமூகத்தினரதும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே எமது நோக்காகின்றது.

கடந்த 25 ஆம் திகதி நாரஹேன்பிட்டியிலுள்ள மாவட்ட செயலகத்தில் எமது தேசிய இயக்கத்தின் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது. இதில் மொழி, இன பேதமின்றியும் எந்தவித வயதுக் கட்டுப்பாடுகளுமின்றி பெருமளவானோர் கலந்துகொண்டிருந்தனர். இதன் யாழ்ப்பாணத்திற்காக அடுத்த கலந்துரையாடல் எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் சகல மக்களும் கலந்து கொள்வதன் மூலம் இளைஞர்களின் சக்தியினால் யாழ்ப்பாணத்திலுள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவுள்ளோம்.

இதில் மாணவர் அமைப்புக்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், பழைய மாணவர்கள், வைத்தியர்கள் என பெருமளவானோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

எந்த ஆட்சியாளர்களின் மாற்றத்தாலும் எமது இளைஞர் அணிக்கு ஆபத்து வராத வகையில் ஒரே குரலில் இந்த இயக்கத்திற்கு நாம் மக்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கவுள்ளோம் என்றார். (இ)



கிளிநொச்சி பகுதிக்கு பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் குழு விஜயம் ஒன்றினை நேற்று மேற்கொண்டிருந்தது. நேற்று நண்பகல் 12.00 மணியளவில் குறித்த குழுவினர், கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் இடம்பெற்றுவரும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் தொடர்பாக பார்வையிட்டதுடன், குறித்த செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகளுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். கிளிநொச்சி விஜயத்தினைத் தொடர்ந்து குழுவினர் யாழ்ப்பாணம் பகுதிக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது. (29)

# சுகாதாரத் தொண்டர்கள் முல்லையில் அமைதி ஊர்வலம்

(முல்லைத்தீவு)

அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தினுள் முல்லைத்தீவில் கடமையாற்றும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி சுகாதாரத் தொண்டர்கள் அமைதி ஊர்வலமொன்றை நடாத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட சுகாதார. பணிமனைக்கு முன்பாக ஆரம்பமான இந்த அமைதி ஊர்வலம் மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு அரச அதிபர் நா.வேதநாயகனிடம் சுகாதாரத் தொண்டர்களினால் மகஜரும் கையளிக்கப்பட்டது.

இந்த அமைதி ஊர்வலத்தில் 50 இற்கும் மேற்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (40)

# பாடசாலையில் சிரமதானம்

(வரணி)

வடவரணி அ.த.க. பாடசாலை வளாகம் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக குளம் போல் காட்சியளித்தது. தற்போது வெள்ளம் வற்றிய நிலையில் வெள்ளத்தால் வளர்ந்த புற்செடிகள் நிரம்பிய நிலையில் பாடசாலை முதல்வர் தலைமையில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்பணியில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் தமது பங்களிப்பினை வழங்கி வருகின்றனர்.

மேலும் இப்பாடசாலைக்கு தொண்டு நிறுவனம் மாணவர்கள் விளையாடி மகிழ்வதற்காக ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களையும் வழங்கியுள்ளமையால் மாணவர்கள் இடைவேளைகளில் விளையாடுவதையும் காண முடிகிறது. (150)

# குடும்பஸ்தரின் சடலம் மரத்திலிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

. காரைநகரில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

காரைநகர் வெடியரசன் வீதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான எஸ்.துரைராசா (வயது - 62) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது இளைய மகன் அண்மையில் நீரில் மூழ்கி இறந்துள்ள நிலையில் மன விரக்தியில் இவ்வாறு மதுபோதையில் தூக்கில் தொங்கியிருக்கக்கூடும் என பொலிஸ் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், மரண விசாரணையின் பின்னர் நேற்று மாலை சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ)

# முதியோர் இல்லத்தில் சிரமதானப் பணி

(திருநெல்வேலி)

கைதடி அரச முதியோர் இல்லத்தில் சிரமதானப் பணியொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக. நிலைய உறுப்பினர்களும், கைதடி தெற்கு மின்னொளி கல்விக்கழக மாணவர்களும் இணைந்து இப்பாரிய சிரமதானத்தை மேற்கொண்டனர். இவர்களுடன் எவரெடி கிளீனிங்ஸ் சேர்விஸ் உறுப்பினர்களும் இளைஞர் கழக சமூகசேவை தொண்டர்களும் கலந்துகொண்டனர்.

சுமார் 100 பேர் இச்சிரமதானப் பணியில் ஈடுபட்டு முதியோர் இல்ல வளாகத்தை துப்புரவு செய்வதில் ஆர்வம் காட்டினர்.

இளைஞர்கள் இணைந்து முதியோர் இல்ல வளாகத்தில் மேற்கொண்ட இச்சிரமதானப் பணிக்கு இல்ல அத்தியட்சகர். உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் உட்பட இல்லத்தில் தங்கி வாழும் முதியவர்கள் என அனைவரும் இளைஞர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளனர். (137)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

'தேர்தலுக்குப் பின்னரான அரசியற் போக்குகள் ஒரு பார்வை' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகிலுள்ள டி.சி.எம். தனியார் கல்வி நிலையத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு வை.சந்திரராசா தலைமையில் இடம்பெறும்.

ஆரம்ப உரையை சொ.சிவபாலன் வழங்கியதை அடுத்து கலந்துரையாடல் இடம்பெறுமெனவும், ஆர்வலர்கள் அனைவரையும் வருகைதருமாறு சர்வதேச மார்க்சிய குழுவின் யாழ்ப்பாணக் கிளை அறிவித்துள்ளது.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2602 திகதி 28-01-2015

ஆங்கில எழுத்து: F

வெற்றி எண்கள்: 08 16 30 49

போனஸ் இல: 34

ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 219508 | 20/- | 4,390,160/- |
| 2 இல | 15700 | 100/- | 1,570,000/- |
| 3 இல | 313 | 1,000/- | 313,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8825 | 40/- | 353,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 624 | 1,000/- | 624,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,000,000/- | - |
| 1 இல + போனஸ் இல | 10389 | 100/- | 1,038,900/- |
| 2 இல + போனஸ் இல | 471 | 500/- | 235,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 413 | 200/- | 82,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 16 | 1,500/- | 24,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 256278 | | 11,161,160/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2015.01.31 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 10,599,150/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொ.பே: 2333546/7

(C/3802)


## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | FRIDAY |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம், பக்திப் பாடல்கள் |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time |
| Am 09.55 | காலைச் செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | I.T.Com |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வாழும் கலைஞர்கள் |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | சுப்பர் திரைப்படம் |
| PM 03.55 | மாலைச் செய்திகள் |
| PM 04.30 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தமிழ் பேசு தமிழா |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தினதும், கலாசார பேரவையினதும் வெளியீடான கிராமிய பாடல் மற்றும் குழந்தை பாடல் இறுவட்டு வெளியீடு கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் இறுவட்டின் முதல் பிரதி வெளியிட்டு வைக்கப்படுவதனையும் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன் உரையாற்றுவதனையும். கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (29)

# குத்தகை கட்டண அதிகரிப்பு பகிஷ்கரிப்பு போராட்டம்

## வலி.தெற்கு பிரதேச சபைத்தவிசாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மீன் சந்தையில் மீன் வியாபாரிகள் தங்களுக்கான குத்தகைக் கட்டணம் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலையில் மேற்கொண்ட பகிஷ்கரிப்புப் போராட்டத்தை உடன் பாட்டின் மூலம் முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாக வலிகாமம் தெற்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராசா பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

பிரதேச சபையின் சட்டத்துக்கு அமைவாக மீன்வியாபாரம் செயபவர்கள், மீன்பெறுமதியில் 4 வீதத தைமீன்சந்தையின் குத்தகைக் காரர்களுக்கு செலுத்தவேண்டும். சுன்னாகம் மீன் சந்தையில் குத்தகைக்காரர் இதுவரைகாலமும் 2 வீதமான தொகையை நல்லெண்ண அடிப்படையில் மீன் வியாபாரிகளிடம் வசூலித்து வந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் 4 வீதக் குத்தகைப் பணத்தை தருமாறு மீன் வியாபாரிகளிடம் குத்தகைக்காரர் கோரியுள்ளார்.

இதனால் அதிருப்தியடைந்த மீன் வியாபாரிகள் மீன்சந்தையை பூட்டி பகிஷ்கரித்தனர். இச்சம்பவம் தொடர்பில் எனக்கு அறிவிககப்பட்டதையடுத்து, அவ்விடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டேன். 4 வீதம் வரையில் அறவிடுவதற்கு குத்தகைக் காரர்களுக்கு அனுமதியுள்ளது என்பதை மீன்வியாபாரிகளுக்கு எடுத்துக்கூறினேன். அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டதையடுத்து, பகிஷ்கரிப்பை கைவிட்டு மீன் வியாபாரத்தில் ஈடுபட்டதாக தவிசாளர் கூறினார். (48)

# தடைசெய்யப்பட்ட மீன்பிடி பாதிக்கப்படும் மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு கடல்நீரேரியை அண்மித்த வல்வை கடற்பகுதியில் சட்டவிரோதமாக தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளை பாவித்து மீன்பிடியில் ஈடுபடுவதால் தொண்டைமானாறு மற்றும் அக்கரையைச் சேர்ந்த இறால் பிடிப்பில் ஈடுபடும் மீனவர்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளனர்.

அச்சுவேலி, ஆவரங்கால், தம்பாலை போன்ற பகுதிகளில் இருந்துவரும் சிறுதொழில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களே இந்த தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளை பாவித்து மீன்பிடியில் ஈடுபடுவதாகவும், இதனால் இறால் பிடிப்பதற்குரிய காலநிலை உள்ளபோதும் தடைசெய்யப்பட்ட மீன்பிடியால் இறால் பெருக்கம் குறைவாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

# 'தமிழ்ப் பசங்க' திரைப்படம் வெளியீட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேசத்திற்கு உட்பட்ட சங்கானைப் பிரதேச இளைஞர்களின் ஒத்துழைப்புடன் பிரதீபனின் தயாரிப்பில் உருவாகிய 'தமிழ்ப் பசங்க' திரைப்படம் ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள லெஸ்லி திரையரங்கில் திரையிடப்பட்டது.

இந் நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி. நாகரஞ்சினி ஐங்கரன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்ததோடு பாராட்டு செய்தியையும் வழங்கினார்.

இந் நிகழ்வில் தவிசாளர் உரையாற்றும்போது,

எனது பிரதேசத்தைச் சேர்ந்த இச் இளைஞர்களின் ஆக்கத் திறன் முயற்சி பாராட்டப்படக் கூடியது என்பதற்கு மேலாக இச செயற்பாடு எமது பிரதேசத்திற்கு பெருமைசேர்க்கும் விடயம் ஆகும்.

இன்றைய இளையவர்கள் மேல் பல்வேறு வகைகளிலும் குற்றம் சுமத்தி நிற்பவர்களுக்கு இவ் இளையவர்களின் ஆக்கத் திறன் முயற்சி, முன்னுதாரணமாய் அமையும்.

விமர்சனங்கள் என்பதற்கு அப்பால் சிறந்த சிந்தனை மற்றும் சமகாலத் தன்மைகள் என்பவற்றைக் கொண்டதாக இது அமைந்திருப்பது போற்றத்தக்கது.

இதற்கும் மேலாக இந்த இளைய கலைஞர்களின் நடிப்பு நிலை மேலும் சிறப்பான ஒன்றாகவே கொள்ள முடியும் இவ் இளைய சமுதாயம் மேலும் சிறப்புப் பெற்று மேல் நிலை அடைய வேண்டும் என வாழ்த்துவதோடு இவர்களது முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய யாவருக்கும் மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கினறேன் என குறிப்பிட்டார். (63)

# இரு நிறத்தில் ஒரு பூ

(கரணவாய்)

பருத்தித்துறை பகுதியில் உள்ள ஒரு வீட்டில் 'பூத்துள்ள செம்பரத்தைப் பூவின் ஒரு பகுதி வெள்ளை நிறமாகவும் ஒரு பகுதி சிவப்பு நிறமாகவும் காணப்படுவது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒருவாரத்தில் ஒரு தடவை இவ்வாறு பூ பூப்பதாகவும் வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார். (18)

# தொழில் பயிற்சி அதிகார சபையினால் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் சான்றிதழை பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் பயிற்சி நிலையங்களிற்கு விண்ணப்பங்கள் கோர்ப்பட்டுள்ளன.

**கல்வித் தகைமைகளாக,**

க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்காக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த.(உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 - 25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

மேலும் யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு கணனி வன்பொருள் கற்கை நெறிக்கும், மின்னியலாளர் பயிற்சிக்கும் விண்ணப்பங்கோரப்பட்டுள்ளது. இதில் கல்வித் தகைமையாக க.பொ.த.(சா/த) வரை கற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 - 35 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாளஅட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், தொலைபேசி இலக்கம், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட அலுவலர், NAITA, இல.44, சோமசுந்தர வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 10.02.2015 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கற்கை நெறியின் பெயரை தவறாது குறிப்பிட வேண்டும் என மாவட்ட அலுவலர் இ.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

# ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பொதுக் கூட்டம் முல்லைத்தீவில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட பிரதான அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உனேஸ் பாருக்கின் ஏற்பாட்டில் 1 ஆவது மக்கள் சந்திப்பு நீராவிப்பிட்டியில் இடம் பெற்றுள்ளது.

இதில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு தங்கள் குறைபாடுகளையும் வேண்டுகோள்கள்ளையும் கேட்டறிந்துள்ளனர். இதில் கட்சியின் ஆதரவாளர்களும் பொது மக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (40)

# விலைகுறைப்பு இல்லை விசனமடையும் பொதுமக்கள்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் முச்சக்கரவண்டி சாரதிகள் பெற்றோல் விலை குறைக்கப்பட்டும் முன்னர் நிர்ணயிக்கப்பட்ட கீட்டணத்தை அறிவிடுவதால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோல், டீசல் விலை குறைக்கப்பட்டும் இன்னும் முச்சக்கரவண்டி சாரதிகள் மக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக விலை கட்டுப்பாடு நிர்ணயிக்கவில்லை எனவும் வேறுபட்ட கட்டணத்தை அற்விடுவதால் மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோல் விலை குறைப்பால் தாம் அதன் நன்மையை அனுபவிக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கும் மக்கள் இது தொடர்பில் முச்சக்கரவண்டி சங்கம், உரிய நடவடிக்கை எடுத்து கட்டண நிர்ணயத்தை அறிவிக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# மகா கும்பாபிஷேகம்

(அச்சுவேலி)

கரவெட்டி கிழக்கு அருள்மிகு கூழாங்கேணி வனியப்பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை ஆரம்பமாகவுள்ளது.

இதில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை எண்ணெய்காப்புச் சாத்துதல் இடம்பெறவுள்ளதுடன் மறுநாள் 2 ஆம் திகதி கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. கும்பாபிஷேக தினத்தன்று நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கலும் இடம்பெறவுள்ளது.

எனவே பக்த அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு வருகைதந்து கும்பாபிஷேகக் கிரியைகளைக் கண்டு அருள் பெறும் வண்ணம் ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (85)

எப்போதும் அச்சத்தில் இருப்பதை விட, ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல்.

- டெஸ்கார்ட்டஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 077719[illegible]4
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## யாருடனும் பேசமுடியாதவர்கள்!

ஆட்சி மாற்றத்திற்கு தமிழ் மக்களை வாக்களிக்கச் சொல்லி, அதன்படி புதிய அரசாங்கத்தையும் தாங்களே கொண்டுவந்ததாகச் சொல்லிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கொண்டுவந்த அரசாங்கத்துடன் தீர்வுப் பேச்சிற்கான முயற்சிகளைச் செய்வதாக ஏதும் செய்திகளைக் காணோம்.

இந்த அரசும் சரிவராது, அகிம்சைப் போராட்டம் இந்த அரசுக்கெதிராகவும் வெடிக்கும் என்று ஒற்றைவிரலை உயர்த்தி முழங்கிய மாவையாரின் பிரகடனம்தான் வந்திருக்கிறது. இந்தமுறை காலக்கெடு எதையும் சொல்லி மாட்டிக்கொள்ள விரும்பாமல் போராட்டத் திகதியை திறந்தபடி விட்டிருக்கிறார்.

அதுதவிர, புதிய அரசிடம் த.தே.கூட்டமைப்பு வைத்த இரண்டு முக்கிய கோரிக்கைகளில் ஒன்று டக்ளஸ் தேவானந்தாவிற்கு அமைச்சுப் பதவி வழங்கக் கூடாது மற்றையது கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை கூட்டமைப்பிற்கே தரவேண்டும்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி யாருக்கு என்று ஒரு நிலைப்பாட்டை எடுப்பது ஜனாதிபதிக்கு தர்மசங்கடமானது. அவரிடம் போய் பதவிக்கு கெஞ்சும் அளவிற்கு முஸ்லிம்களுடனான உறவில் விரிசலை வளர்த்து வைத்திருக்கிறார்கள் இந்தத் தமிழரசுத் தலைவர்கள்.

70களுக்கு முன்பெல்லாம் தமிழர்களுக்கும் தங்களுக்கும் ஒரே தலைமைதான் என்று தேர்தல்களில் தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்து வந்தவர்கள்தான் முஸ்லிம்கள். முஸ்லிம் காங்கிரசைத் தொடங்கிய தலைவர் அஷ்ரப் உட்பட பல முஸ்லிம் தலைவர்களும் தமிழரசுக் கட்சியிலேயே இருந்தவர்கள்.

தமிழ்த் தலைமை நடந்துகொண்ட விதம்தான் முஸலிம்களைத் தனிவழி பார்க்க வைத்தது; முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தோற்றத்திற்குக் காரணமானது. உண்மையில் சிங்கள அடக்குமுறையை எதிர்த்து உருவானதல்ல முஸ்லிம் காங்கிரஸ்.

தமிழ்த் தலைமை தங்களை ஏமாற்றுவதாகவே அவர்கள் தனிக்கட்சி தொடங்கினார்கள். இப்போதும் முஸ்லிம்களிடம் பேசிப்பார்த்தால் தெரியும், தமிழர்களைத்தான் அவர்களால் பிரதானமாக நம்பமுடியாது என்று கருதுகிறார்கள்.

தமிழர்களின் தலைமையாக சொல்லிக்கொண்டவர்கள், இனவாதத்தின் மூலம் தமிழர்களை ஒன்றுதிரட்டுவதற்காக முஸ்லிம் எதிர்ப்பையும் தூண்டி வளர்த்தார்கள் என்பதே உண்மை. தங்களது தேர்தல் லாபத்திற்காக வளர்த்த தமிழ் இனவாதத்தின் விளைவுதான் இது.

அதன்பிறகு அவர்களது தேர்தல் லாபத்திற்காக முஸ்லிம்களும் இனவாதத்தைப் பேசினார்கள். சிறுபான்மையினருக்கான அரசியலுரிமைகளைப் பெறுவதற்கு முஸ்லிம்களையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்ற தேவையை விளங்கிக் கொள்ளாத தமிழ்த் தலைவர்கள், தேர்தல் வெற்றிகளுக்காக இனவாதம் பேசிப் பேசி பிளவை மேலும் அகலப்படுத்தினார்கள்.

இப்போதும் முஸ்லிம்களையும் அவர்களது அபிலாசைகளையும் அலட்சியப்படுத்தியபடியேதான், தமிழர்களோடு அவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று தமிழ்த் தலைவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

"கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் காலத்திலும், அதன் பின்னரும் முதலமைச்சர் பதவி விட்டுத் தருகின்றோம். கூட்டாட்சிக்கு வாருங்கள் என்று அழைத்தோம். அப்போது அதனை நிராகரித்துவிட்டு மஹிந்தவோடு இணைந்து ஆட்சியை அமைத்தார்கள். இப்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலமைச்சர் பதவியை விட்டுத்தர வேண்டும் என்று கோருவது என்ன வகையிலான நியாயம்?" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்புக் கட்டுரையாளர் எழுதுகிறார்.

இப்போதும், அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்று கவனிக்க இவர்கள் தயாரில்லை. இவர்களுக்குப் பதவியை விட்டுத் தராவிட்டால் சிங்களத் தலைவரிடம் முறையிடுவோம் என்கிற வகையில் செயற்பட்டு, சக சிறுபான்மைச் சமூகத்தை வெல்ல முடியுமா? இன்னுமின்னும் சமூக விலகலைத்தான் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

- ஆசிரியர்

# புதிய கேளிக்கை விடுதிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது

## சுகாதார அமைச்சர் உறுதி மொழி

இனிவரும் காலங்களில் கேளிக்கை விடுதிகளுக்கான புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது என அமைச்சரவை ஊடகப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் கடந்த அரசு கேளிக்கை விடுதிகள்ள டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை மற்றும் புத்தளம் மாவட்டத்தில் உள்ள தீவு ஒன்றிலும் அமைக்கத் தீர்மானித்திருந்தது. தற்போது இயங்கும் கேளிக்கை விடுதிகளை எவ்விடத்தில் நடாத்துவது என்பது தொடர்பில் தற்போது ஆராய்ந்து வருகிறோம்.

எதிர்காலத்தில் புதிய கேளிக்கை விடுதிகளை அமைப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்போவதில்லை. ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்கள் எவ்வாறு வழங்கப்பட்டன என்பது தொடர்பிலும் ஆராயவுள்ளோம்.

அனுமதியில்லாத கேளிக்கை விடுதிகளை நடத்துவதற்கு கட்டடங்களை வாடகைக்கு விடுவதும் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# சமுர்த்தி நிவாரணம் பெறுவதில் வறுமைக்குட்பட்டோர் பாரபட்சம்

சமுர்த்திக்கொடுப்பனவு, நிவாரணங்கள் வழங்குவதில் உள்ள அரசியல் பாகுபாடு காரணமாக வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பலர் இந்த உதவிகளை பெற முடியாத நிலையில் உள்ளதாக மன்னார் நகர சபை உறுப்பினர் ஏ.மெரினஸ் பெரேரா, தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் மன்னார் மாவட்டத்தின் சமுர்த்தி நியமனத்தில் பாரிய முறைகேடுகளும் அநீதிகளும் இழைக்கப்பட்டுள்ளன. சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் 90 சத வீதத்துக்கும் அதிகமானோர் அரசியலில் பயன்படுத்தப்படுகிறார்கள். இவர்கள் பிரதேச செயலாளர்களுக்கும் கட்டுப்படாத தன்மையே காணப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா காலத்தில் கொண்டுவரப்பட்ட இத்திட்டம் வடக்கில், மன்னார் மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்புதான் அமுல்படுத்தப்பட்டது.

சமுர்த்திக்கென தனியான அமைச்சர் இருந்தபோதும் இங்கு வேறொரு அமைச்சர் மூலம் நியமனங்கள் வழங்கப்பட்டன. பொது அறிவித்தல்களோ நேர்முகப்பரீட்சைகளோ இல்லாமல் தகுதியில்லாத பலர் அரசியல் ரீதியாக உள்வாங்கப்பட்டு சமுர்த்தி நியமனத்தின் தன்மை பற்றி அறியாமல் அரசியல் கட்சிகளுக்கு ஆட்களை பிடிப்பது மட்டும் இல்லாது மக்களையும் பிழையான வழியில் நடாத்துகின்றனர்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்காக அரசினால் கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தினை தனி மனித அரசியல் இலாபத்துக்கு பயன்படுத்துகின்றார்கள்.

இதற்கெல்லாம் காரணம் உரிய துறைசார் அமைச்சர்கள் இப்பகுதிகளுக்கு வராமல் விடுவதும், இப்பகுதியைச் சேர்ந்த அமைச்சரே அனைத்துத் துறைகளிலும் சம்பந்தம் இல்லாது அதிகாரம் செலுத்துவதுமே ஆகும்.

எனவே, புதிய அரசாங்கத்தில் பொறுப்பான அமைச்சரில் நாமும் மக்களும் வைத்துள்ள நம்பிக்கை வீண் போகாது நடவடிக்கை எடுக்க வேண்டும். பல மாற்றங்களைச் செய்வதனூடாக உரிய அதிகாரிகளுக்கு உரிய பணிப்புரைகளை வழங்கி மக்களின் நம்பிக்கையை அதிகரிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# குற்றச்சாட்டுக்கள் போலி என்றால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்

## முன்னாள் ஜனாதிபதிக்கு ஜே.வி.பி. சவ[illegible]

போலியான முறையில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவும், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஸவும் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என ஜே.வி.பி.கட்சி கோரியுள்ளது.

ஊழல் மோசடிகள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவிற்கும், அவரது புதல்வர் நாமல் ராஜபக்ஸவிற்கும் எதிராக லஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்றால் அதனை நிரூபித்து, குற்றம் சுமத்திய தரப்பினருக்கு எதிராக அவர்கள் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என ஜே.வி.பி.யின் மேல் மாகாணசபை உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள இருவருமே சட்டத்தரணிகள் எனவும், சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்து குற்றச்சாட்டுக்களை பொய்ப்பிக்க அவகாசம் உண்டு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாறாக உணர்ச்சி பூர்வமான கருத்துக்களை மட்டுமே இருவரும் வெளியிட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ பதவியில் இருந்த காலத்திலேயே ஊழல் மோசடிகள் குறித்து ஜே.வி.பி. குற்றம் சுமத்தி வந்தது என அவர் தெரிவித்துள்ளார். சுமத்தப்பட்டுள்ள அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் நிரூபிக்க ஆதாரங்கள் உண்டு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வீடமைப்பு, சமுர்த்தி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மீது சுயாதீன கணக்காய்வு

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல் நிதி மோசடி தொடர்பில் சுயாதீன கணக்காய்வு செய்ய அமைச்சர் சஜித் பிரேமதாச உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய இரண்டு சர்வதேச கணக்காய்வு நிறுவனங்கள் இந்த பரிசீலணையை இலவசமாக முன்னெடுக்கவுள்ளன.

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாச அமைச்சின் செயலாளருக்கு வழங்கிய உத்தரவிற்கமைய பக்கச்சார்பற்ற முறையில் இந்தப் பரிசீலணை முன்னெடுக்கப்படவுள்ளது.

மேற்படி வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள 21 அரச நிறுவனங்களில் குறித்த பரிசீலணை முன்னெடுக்கப்படும். இதற்கமைய வீடமைப்பு அமைச்சின் கணக்காய்வினை ஆர்னஸ்ட் என்டியங் என்ற நிறுவனமும் சமுர்த்தி அமைச்சின் கணக்காய்வினை பிரைஸ் வொட்டர் ஹவுஸ் குப்ஸ் என்ற நிறுவனமும் முன்னெடுக்கும்.

நல்லாட்சிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு கடுமையான நடவடிக்கை எடுத்து சட்டத்தின் முன் நிறுத்தப்படவுள்ளதாக வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸ கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

மேற்படி வீடமைப்பு அமைச்சின் கீழ் கட்டட நிர்மாண திணைக்களம் அரசு தொழிற்சாலைகள் ஒன்றினையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நகர வீடமைப்பு அதிகார சபை நான்கு அபிவிருத்தி நிறுவனம் அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம் இலங்கை அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபனம் மற்றும் கட்டட நிர்மாண துறை சார்ந்த மூன்று நிறுவனங்களில் குறித்த கணக்காய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி அமைச்சின் கீழ் சமுர்த்தி ஆணையாளர் திணைக்களம் திவிநெகும கீழுள்ள சமுர்த்தி அதிகார சபை உள்ளிட்ட மூன்று நிறுவகங்களில் ஆய்வு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்காக 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

## வடமாகாண மீன்பிடித்துறை அமைச்சர் தகவல்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் போராளிகள் மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

இது தொடர்பாக மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சு தெரிவிக்கையில்,

மக்களின் விடிவிற்காக போராடி உயிர் நீத்த எமது போராளிகள் அரசியல் கைதிகள், மற்றும் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட எமது முன்னாள் போராளிகளின் குடும்பங்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

அதனடிப்படையில், 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற வட மாகாண சபை வரவு செலவு திட்டத்தில் முன்னாள் போராளிகளின் குடும்பத்தினரின் வாழ்வாதாரத்தினை மீட்டெடுப்பதற்காக வேலைத்திட்டங்கள் முன் னெடுக்கப்படவில்லை. எனவே, அவர்களுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென வடமாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

அந்த வகையில், 2015 ஆம் ஆண்டில் மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் இருந்து, சுமார் 40 மில்லியன் ரூபா முன்னாள் போராளிகள் மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பங்கள், பிள்ளைகளின் வாழ்வாதாரம், கல்விக்காக ஒதுக்கியுள்ளதாக அவர் கூறினார்.

இந்த குடும்பங்களுக்கு ஒதுக்கியுள்ள நிதி எந்த வித பாதகமான சூழ்நிலைகளையும் எதிர்நோக்குவதாக எவரும் சந்தேகம் கொள்ள வேண்டாமென அவர் கேட்டுக்கொண்டதுடன், அரசாங்கத்திற்கு எதிராக எந்த செயற்பாட்டினையும் முன்னெடுக்கவில்லை என்றும் அவர்கூறினார்.

அத்துடன், வடமாகாணத்தில் உள்ள 5மாவட்டங்களிலும் முன்னாள் போராளிகளின் விபரங்கள் அரசியல் கைதிகளின் குடும்ப விபரங்கள் என்பன பெறப்பட்டு சரியான முறையில் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு குறித்த நிதி மூலம் உதவிகள் வழங்கப்படும்.

5 மாவட்டத்திலுமுள்ள முன்னாள் போராளிகள் மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பங்களின் விபரங்களை தமது பிரதேசத்தில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், ஊடாக மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். (25)

## முன்மாதிரியான செயற்பாடு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசமொன்றில் இயங்கும் முன்பள்ளியில் 2015 இல் கல்வி கற்பதற்காக சேர்க்கப்பட்ட மாணவியொருவருக்கு முன்பள்ளி ஆசிரியர் தனது சொந்தச்செலவில் சீருடைகளை மாணவிக்கு உதவி புரிந்துள்ளார்.

சகல முன்பள்ளி மாணவ மாணவிகளும் முன்பள்ளிக்கென தயாரிக்கப்பட்ட உடுப்புக்கள் (சீருடைகளை) அணிந்து வரும் நிலையில் இம் மாணவி மட்டும் சீருடையணியாது வருவதை அவதானித்த முன்பள்ளி ஆசிரியர் செய்த உதவி இவ் குடும்பத்திற்கு மிகப் பெரிய உதவியாக உள்ளதாக குழந்தையின் பெற்றோர் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

அது மட்டுமல்லாமல் மேற்படி குடும்பம் பொருளாதார ரீதியிலும் பின்தங்கிய நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (150)

## முல்லை கடற்றொழிலாளர்களுக்கு இயந்திரம் வழங்கப்பட்டது



முல்லைத்தீவிலுள்ள மீனவ சங்கங்களின் 44 கடற்றொழிலாளர்களுக்கு மானியமாக 22 வோட் இயந்திரமும் வலைகளும் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் யோ.அமலதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வழங்கி வைத்துள்ளார்.

இதற்கு சேவாலங்கா நிறுவனததினதும் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் நிதியுதவியுடன் 22 வோட் இயந்திரமும் 13200000 இலட்சம் ரூபா நிதியுதவியும் பயனாளிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஐக்கிய நாடுகளின் அகதிகளின் உயர் ஸ்தானிகராலய இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கோலாம் அபாஸ் சேவாலங்கா பிரதித்திட்டப் பணிப்பாளர் திருமதி அனட் ரொய்ஸ் கரை துறைப்பற்று பிரதேச செயலாளர் ரி.திரேஸ்குமார் உதவிப் பணிப்பாளர் துசுதாகரன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் முல்லைத்தீவு ஆர்.பாலச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (40)

## தம்பசிட்டி சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக பெருவிழா

(வடமராட்சி)

வடமராட்சி தும்பசிட்டி மாயக்கை ஸ்ரீ சித்திவிநாயகர். ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன நவ குண்டபட்ச துவிதள சுந்தர விமான மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.33 மணிக்கு நடைபெறவுள்ளது.

மஹாகும்பாபிஷேக கிரியைகள் 5 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளன. பக்த அடியார்கள் எம்பெருமானுக்கு எண்ணெய்க் காப்புச்சாத்தும் நிகழ்வு 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4.00 மணிவரை நடைபெறவுள்ளது.

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய பிரதமகுரு சக்தி உபாசகர் சாதக இளவரசு சிவஸ்ரீ சுந்தர ஸ்ரீரங்கநாதக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாகவிருந்து கும்பாபிஷேகத்தை நடாத்துவார்.

பிரதமகுரு கிரியா சிரோன் மணி வேதாகமபூஷணம் சிவஸ்ரீ. சிதம்பரமகேந்திரநாதக் குருக்கள் சர்வபோதகராகப் பணியாற்றுவார்.

நல்லை ஆதீன குருமகாசந்நிதானம் சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் இதிகாச விற்பன்னர் விஸ்வப்பிரம்ம ஸ்ரீ சசாங்கன் குருக்கள் ஆகியோர் ஆசிகளை வழங்குவர். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இவ்வாலய திருப்பணி வேலைகள் சுமார் 50 இலட்சம் ரூபா செலவில் பூர்த்தியடைந்திருக்கின்றன. தென்னிந்திய மணிகண்டன் ஆசாரியார் சுந்தர விமான விக்கிரகங்களையும் அல்வாய் சிற்பக்கலா சுரபி எஸ்.ரவி ஆச்சாரியார் ஆலயத்தின் கட்டடத் திருப்பணிகளையும் மேற்கொண்டிருந்தார். (01)

## திருமறைக்கலாமன்றத்தின் பொற்தூறல் புதிய நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

50 ஆவது ஆண்டில் காலடி பதித்துள்ள திருமறைக் கலாமன்றம் இவ்வாண்டில் முன்னெடுக்கவுள்ள நிகழ்சிகளில் ஓர் அங்கமாக மாதந்தோறும் நடைபெறவுள்ள பொற்தூறல் என்னும் நிகழ்வின் முதலாவது மாதத்துக்கான நிகழ்ச்சி 'தைத் திங்கள் பொற்தூறல்' என்னும் பெயரில் நாளை சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இல.286, பிரதானவீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறையின் ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி . எஸ். சிவலிங்கராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்ச்சிகளாக சிவானந்தன் அகிலனின் இசைக் கச்சேரியும், கலைத்தூது அழகியல் கல்லூரியின் நடன ஆசிரியை திருமதி. அகல்யா ராஜபாரதியின் மாணவிகளின் நடனம் என்பன இடம் பெறவுள்ளன. இந் நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திரு மறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

## சுவாமி விவேகானந்தரின் பிறந்ததினம் மட்டக்களப்பில் சிறப்புற நடைபெற்றது

ஏழைகளுக்காக இதயம் உருகிய உத்தமர் சுவாமி விவேகானந்தரின் 153 ஆவது பிறந்த தினவிழாவை மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள சமூக நலன்புரி அமைப்பும் விவேகானந்த தொழிநுட்பவியல்கள் கல்லூரியும் இணைத்து அண்மையில் கொண்டாடின. சமூக நலன்புரி அமைபபின் தலைவர் எஸ்.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு இராமகிருஸ்ணமிஷன் சுவாமி பிரபு பிறேமானந்தாஜீ மகராஜ் கலந்து சிறப்பித்தார்.

அத்தோடு இந்நிகழ்விற்கு சிறப்பு அதிதிகளாக லண்டனில் இருந்து வருகை தந்த கார்கில்ஸ் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் சத்தியானநதராஜா சிவசங்கரின் தாயார் பத்மலோஜினி சத்தியானந்தராஜாவின் சகோதரர் லவன் சத்தியானந்தராஜா கலந்து சிறப்பித்தனர்.

மேலும் கௌரவ அதிதிகளாக நன்கொடையாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் மாவட்ட செயலக, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் பொறுப்பாளர்கள், தொழிற்கல்வி நிறுவனங்களின் பணிப்பாளர்கள், நிறுவனங்களின் திட்ட உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள், கழகங்களின் உறுப்பினர்கள், பெற்றோர்கள், கல்லூரி பயிலுநர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

ஏழைமக்களை மிக ஆழமாக நேசித்த சுவாமி விவேகானந்தர் பெரிதும் விரும்பியவாறு அவரது பிறந்ததின விழாவில் பல வறிய பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை இந்நிகழ்வின் சிறப்பம்சமாகும்.

அத்தோடு கல்லூரி மாணவர்கள் திலகவதியார் மகளிர் இல்ல மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## சிறப்புற நடைபெற்ற கால்கோள் விழா



தென்மராட்சி கல்வி வலயத்தின் கால்கோள்விழா அண்மையில் கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார், சிறப்பு விருந்தினராக கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயத்தின் ஓய்வுநிலை பகுதித்தலைவர் திருமதி. பராசக்தி ஆறுமுகஜோதி ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களைக் கௌரவித்தனர். (90)

# தேசிய பாதுகாப்புக்கு புதிய திட்டங்கள் தயார்

## ஜனாதிபதி அறிவிப்பு



(கொழும்பு)

தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அரசாங்கம் புதிய திட்டங்களை வகுத்துள்ளதாக படைகளின் பிரதானியான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு அமைச்சுக்கு நேற்றுமுன்தினம் ஜனாதிபதி விஜயம் செய்தார். அங்கு தனது பணிகளை ஆரம்பித்த பின் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு விஜயம் செய்து விடயங்களை ஆராய்ந்தனர். இதன் மூலம் தேசிய பாதுகாப்பை பலப்படுத்த உள்நாட்டின் ஜனநாயக திட்டங்கள் பின்பற்றப்பட வேண்டும் இதன் மூலம் தேசிய பாதுகாப்பை வலுவானதாக உருவாக்க முடியும்.

இதற்கான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கடமைகளை பொறுப்பேற்றார் ஜனாதிபதி ஊடகப்பணிப்பாளர்



(கொழும்பு)

ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் தர்மசிறி பண்டார ஏக்கநாயக்க நேற்றுமுன்தினம் தமது கடமைகளை பொறுப்பெற்றார்.

ஜனாதிபதி ஊடக பிரிவு அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பல ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு சிரேஷ்ட ஊடகவியலாளர் தர்மசிறி பண்டார ஏக்கநாயக்கவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

இப்பாகமுவ மத்திய கல்லூரியின் பழைய மாணவரான தர்மஸ்ரீ பண்டார ஏக்கநாயக்க, ஊடகத்துறையில் இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட அனுபவமுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளராவார்

# பல்கலைக்கழக சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய ஏற்பாடு



(கொழும்பு)

பல்கலைக்கழக சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவிக்கின்றார்.

பல்கலைக்கழகங்களுக்கு அதிகாரங்களை வழங்கும் வகையில், சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இதற்கான வரைபு அமைக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான கருத்துக்களை மாணவர்கள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பலரிடம் கேட்டறியவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மொஹான் பீரிஸை அச்சுறுத்தியதான முறைப்பாடு உண்மைக்குப் புறம்பானது

## தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் தெரிவிப்பு

44 ஆவது பிரதம நீதியரசரான மொஹான் பீரிஸின் வீட்டுக்குச் சென்று, அவரை அச்சுறுத்தியதாக, எனக்கு எதிராக செய்யப்பட்டுள்ள முறைப்பாடானது உண்மைக்கு புறம்பானது என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மத்திய மாகாண சபையின் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்னதினம் கொழும்பில் நடைபெற்றது.

அங்கு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜப்பானிலுள்ள எனது நண்பரொருவர் மொஹான் பீரிஸை சென்று பார்த்து வரச்சொன்னார். அதன் பின்னரே நான் அவரது வீட்டுக்குச் சென்றேன். நான் அவரை அச்சுறுத்தவில்லை என்பதை நிரூபிக்க அனைத்து சாட்சியங்களும் என்னிடம் உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

"பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸை எனக்கு 20 வருடகாலமாக நன்றாகத் தெரியும். அவருடைய வீடு ஜனாதிபதி மைத்திரிபாலவின் வீட்டுக்கு அருகில் உளளது என்பதை நான் சமீபத்தில் தான் அறிந்தேன்.

என்னை அவருடைய வீட்டுக்கு வருமாறு இரு முறை அழைத்திருந்தார். அந்த அழைப்பை ஏற்று கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அவரது வீட்டுக்கு நான் சென்றேன். அவரது பாதுகாவலர்கள் தான் என்னை அவரது வீட்டின் உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

அவர், பிறிதொரு கூட்டத்தை நடத்தி கொண்டிருந்தமையால் அவருக்காக சுமார் 20 நிமிடங்கள் காத்திருந்தேன்.

பின்னர், நான் அவருடன் கலந்துரையாடினேன். தற்போதைக்கு தன்னால் இராஜினாமா செய்ய முடியாது, ஓய்வூதியத்தை சரி செய்துகொள்ள வேண்டும். எனக்கென வீடொன்று இல்லை. எனவே, ஆகஸ்ட் மாதம வரை நான் பதவியில் இருப்பேன். இது குறித்து ஜனாதிபதியுடன் பேசுவதற்கு நேரத்தை ஒதுக்கித்தாருங்கள் என்று கேட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9.30 மணிக்கு ஜனாதிபதியுடன் பேச்சுவாரத்தை நடத்துவதற்கு நேரமும் ஒதுக்கியிருந்தேன்.

ஆனால், இப்படி என்மீது அவர் பழி சுமத்துவார் என்பதை நான் அறிந்திருக்கவில்லை. அப்படி நான் அச்சுறுத்தியிருந்தால், அவரது பாதுகாவலர்கள் 119 அவசர இலக்கத்துக்கு அழைத்திருக்க முடியும் இல்லையேல் அவர்கள் என்னைக் கைது செய்திருக்கவும் முடியும். ஏன் அவ்வாறு செய்யவில்லை. இதிலிருந்தே அது பொய்யென்பது தெரியவருகின்றது என்றும் தெரிவித்தார்.

# தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு பணிப்பாளர் நியமனம்



(கொழும்பு)

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக எம்.எம். சுஹைர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து, இதற்கான நியமனக் கடிதத்தை எம்.எம். சுஹைர் நேற்றுமுன்தினம் பிற்பகல் பெற்றுக்கொண்டார்.

1994 ஆம் ஆண்டில் அரசியலில் பிரவேசித்த சுஹைர், 2000 ஆம் ஆண்டு வரை தேசிய பட்டியல் உறுப்பினராக நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

2004 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவராக எம்.எம். சுஹைர் செயற்பட்டிருந்தார்.

2006 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை ஈரான் நாட்டிற்கான இலங்கையின் தூதுவராகவும் அவர் சேவையாற்றியுள்ளார்.

# 1000 கிராம சேவையாளர்களை இணைப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

ஆயிரம் கிராம சேவை உத்தியோகத்தர்களை புதிதாக இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவிக்கின்றது.

கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கான பரீட்சையில் சித்திபெற்று, நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் இவ்வாறு இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா கூறினார்.

கிராம சேவை உத்தியோகத்தர்கள் தமது பணிகளை உரியமுறையில் முன்னெடுப்பதற்கு தற்போது பொருத்தமான சூழ்நிலை காணப்படவில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அந்தச் சூழ்நிலையை விரைவில் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# யோஷித்தவின் கடற்படை விவகாரத்தை விசாரிக்க குழு நியமனம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியின் மகன் யோஷித்த ராஜபக்ஷ கடற்படையில் இணைந்துக் கொள்ளப்பட்டமை குறித்து ஆராயவதற்கு விசாரணைக் குழுவொன்றை கடற்படைத் தளபதி நியமித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகன் யோஷித்த ராஜபக்ஷ கடற்படையில் லெப்டினனாக கடமையாற்றி வருகின்றார். எந்த அடிப்படையில் யோஷித்த ராஜபக்ஷ கடற்படையில் உள்ளீர்க்கப்பட்டார் என்பது குறித்து விசாரணை நடாத்தப்பட உள்ளது.

யோஷித்த ராஜபக்ஷ, கடற்படைச் சட்டங்களுக்கு புறம்பான வகையில் செயற்பட்டதாக பாதுகாபபுச் செயலாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை கருத்திற் கொண்டு உரிய விசாரணை நடாத்துமாறு கடற்படைத் தளபதிக்கு பாதுகாப்புச் செயலாளர் உத்தரவிட்டுள்ளார்.

கடற்படையின் உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கடற்படையிலிருந்து ராஜினாமா செய்வதாக யோஷித்த ராஜபக்ஷ, கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ள போதிலும் இதற்கு கடற்படைத் தளபதி அனுமதியளிக்கவில்லை என கடற்படை பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார.

யோஷித்த கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர், வழங்கப்பட்ட பதவி உயர்வு, வெளிநாட்டுப் புலமைப் பரிசில், கடற்படையில் கடமையாற்றியவாறே அரசியலில் ஈடுபட்டமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. ஜே.வி.பி. கட்சியினரும் யோஷித்த தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



யாழ்.ஸ்ரான்லி வீதி கொமொஷல் வங்கி, யாழ்.நாயன்மார்க்கட்டில் இயங்கிவரும் தாய்தந்தையர்களை இழந்த மாணவர்கள் அமைப்புக்கு (SOS.Village) 10 கணனிகள், 2 பிறிண்டர்கள், 1 புறொஜெக்டர் என்பனவற்றை அன்பளிப்பாக வழங்கியது. இந்நிகழ்வு அண்மையில் பாடசாலையில் நடைபெற்றதுடன் கணனிக் கூடத்தை வங்கி உத்தியோகத்தர் பார்வையிடுவதுடன், வங்கி உத்தியோகத்தர்களுடன் மாணவர்கள் நிற்பதையும் காணலாம். (01)

# நீண்டகாலம் சேவையாற்றியவர்களை பாராட்டி கௌரவிக்க ஏற்பாடு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 25 வருடங்களுக்கு மேலாக சேவை மேற்கொண்ட மூவர் கல்லூரிசமூகத்தால் பாராட்டப்படவுள்ளனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி முதல்வர் வண. கலாநிதி.டி.எஸ்.சொலமன் இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணக்கல்லூரியில் முகாமைத்துவ சேவையில் பணியாற்றிய றொகான் பிறேமானந் தேவசகாயம் கல்விப் பணியில் ஆசிரியர் சேவையைப் புரிந்த நல்லையா விக்டர் ஜெயக்குமார், திருநாவுக்கரசு சிவசண்முகநாதன் ஆகியோரது சிறப்புப் பணிகளை மெய்சி நன்றி செலுத்தும் ஆராதனை நிகழ்த்தப்படும்.

இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை பேராலயத்தில் இந்நிகழ்வு இடம் பெறும். பழைய மாணவர், அன்பர்கள், பெற்றோர்களைக் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அதிபர் கலாநிதி வண.சொலமன் கேட்டுள்ளார். (92)

# குடிநீர் சுகாதார சேவைகளை எவ்வாறு மக்களுக்கு வழங்கலாம்

## வேள்ட் விஷன் நிபுணருடன் கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மற்றும் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கு எதிர்காலத்தில் (4 ஆண்டுகள்) எவ்வாறு உயர் தரமான குடிதண்ணீர் மற்றும் சுகாதார சேவைகளை வழங்கலாம் என்ற பகுப்பாய்வு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இடம்பெற்றது.

அவுஸ்ரேலியாவில் இருந்து வருகைதந்த 'வேள்ட்விஷன்' நிபுணர் நிரோசினி நாயகர் பங்குதாரர்களுடனான கலந்துரையாடல் மற்றும் அனுபவப் பகிர்வு மூலம் கற்றறிந்து கொண்டார்.


இந்நிகழ்வில் சுழிபுரம் பிரதேச சபை செயலாளர், அலுவலர்கள், சாவகச்சேரி நகர மற்றும் பிரதேச சபை அலுவலர்கள், சு.வை.அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள், பிரதேச செயலக அலுவலர்கள், கல்வியியலாளர்கள், தேசிய நீர்வழங்கல் சபை, நீர்பாசன திணைக்கள அலுவலர்கள் என பல பங்குதாரர்கள் கலந்து கொண்டனர்.

சங்கானை - சாவகச்சேரியில் அடுத்து வரும் நான்கு ஆண்டுகளுக்கு மிகப் பொருத்தமான குடிதண்ணீர், சுகாதார சேவைகளுடன் மழைநீர் தேக்குதல், மழைநீர் கடலுக்குள் செல்வது தடுக்கப்படல் என்பன ஆராயப்பட்டன.

மேலும் பலம், பலவீனம், வாயப்பு, தரம் என்பன (SWOT) "சுவட்" பகுப்பாய்வு மூலம் விரிவாக ஆராய்ந்து கேட்டறிந்து கொண்டார். மேற்படி சாவகச்சேரி, சங்கானை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் குடிதண்ணீர் மற்றும் சுகாதாரத் திட்டம் ஆரம்பிக்கும் போது சகல துறைசார்ந்த அலுவலர்கள், அதிகாரிகள் உயர்தரமான பங்களிப்பை வழங்குமாறு கேட்டுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் வேள்ட்விஷன் செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெ.அன்ரனி, ஒருங்கிணைப்பாளர் அலெக்ஸ் றொச் வேள்ட்விஷன் பிரதிநிதிகள் எனப பலர் கலந்து கொண்டனர்.(92)

# பான்ட் வாத்தியக் கருவிகள் பாடசாலைக்கு வழங்கிவைப்பு



(யாழ்ப்பர்ணம்)

கோண்டாவில் பரஞ்சோதி மகாவித்தியாலய கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கின் வசந்த நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட பான்ட் வாத்தியக்கருவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேசசபையின் எதிர்க்கட்சித்தலைவர் அம்பலம் இரவீந்திரதாசன் கலந்து கொண்டு கருவிகளை வழங்கிவைத்தார்.

# சந்தேகத்துக்கிடமான தீ விபத்து எரிகாயமடைந்த கணவனும் உயிரிழப்பு

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் ஏற்பட்ட தீ விபத்தில் எரிகாயமடைந்த கணவன நேற்றுமுன்தினம் புதன்கிழமை உயிரிழநததாக வவுனியா பொது வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் வெளிநாட்டிலிருந்து வந்த பாலச்சந்திரன் கஜேந்திரன், அவரது மனைவியான கஜேந்திரன் சுதாஜினி ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை எரிகா யங்களுடன் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட நிலையில் மனைவி உயிரிழந்தார்.

இந்த நிலையில், கணவனும் பின்னர் உயிரிழந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த தீ விபத்தின்போது வீட்டு அறையிலிருந்த கட்டில், மின்விசிறி மற்றும் இதர பொருட்களும் அறைக்கு முன்பாக இருந்த சாய்மனைக்கதிரையும் முழுமையாக எரிவடைந்துள்ளன.

இந்த தீ விபத்து தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ள நிலையில், வவுனியா பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (70)

## முரசின் இன்றைய பலன்

(30.01.2015 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் தை மாதம் 16 ஆம் திகதி.
மரணயோகம் / ஏகாதசி.
ரோகினி நட்சத்திரம் பி.ப. 03.49 வரை. பின் மிருகசீரிடம்.
இராகு காலம 11.06 - 12.36 வரை. சுபநேரம 06.36 - 08.06 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
உங்களின் சமயோசித புத்தியால் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளல்.

**ரிஷபம்**
சகஊழியர்களுடன் நட்புத் தொடர்வதால் பணிகள் குறித்த காலத்துக்குள் நிறைவேறல்.

**மிதுனம்**
பெற்றோர் மற்றும் நண்பர்கள் வழியில் ஏற்பட்டிருந்த மனத் தாங்கல் அகலும்.

**கடகம்**
மன அழுத்தம் மறைவதுடன் சிந்தனையில் தெளிவு பிறக்கும்.

**சிம்மம்**
வெளிநாடுகளில் இருந்து மகிழ்சசி தரும் தகவல்கள் கேட்க நேரிடும்.

**கன்னி**
டெங்கு பரவும் சூழலைத்தக்க வைத்ததால் தண்டம் ஏற்படல்.

**துலாம்**
வேலைப்பளுவினால் தேக நலம் சிறிது பாதிக்கப்படல்.

**விருச்சிகம்**
எதிர்பாராது ஏற்பட்ட இடமாற்றம் பதகளிப்பைத்தரல்.

**தனுசு**
கிடைக்க வேண்டிய நற்பெயரை பிறர் பயன்படுத்த முற்படுவர்.

**மகரம்**
எவருக்கும் வாக்குறுதியை கொடுத்து விடாதீர்கள்.

**கும்பம்**
எதிரியைக் காண நேரிடின் பொறுமை காக்கவும்.

**மீனம்**
போட்டி மற்றும் கலைநிகழ்வுகளில் பரிசு பாராட்டுப்பெறல்.

# பொது அமைப்புக்கள் சிலவற்றில் கிளிநொச்சியில் நிதி மோசடி

## உறுப்பினர்கள் வெளிப்படையாக குற்றச்சாட்டு

கிளிநொச்சியில் உள்ள சில பொது அமைப்புகளில் நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக அமைப்புகளின் உறுப்பினர்களால் வெளிப்படையாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. பொது அமைக்களில் மக்கள் பணி எனும் போர்வைக்குள் பதவிகளுக்கு வருகின்ற ஒரு சில நபர்களால் இவ்வாறு நிதி மோசடிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோருகின்றனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தில் கரைச்சி, பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வந்த பால் நிலை சமத்துவம் தொடர்பான வீதி நாடகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பத்து இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட தொகை மோசடி செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகினறது.

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேசத்தில் பெண்கள் பால்நிலை சமத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அக்டெக் நிறுவனம் பால் நிலை சமத்துவம தொடர்பான விழிப்புணர்வு நாடகம் ஒன்றினை ஏற்பாடு செய்து கரைச்சி கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசத்தின் ஊடாக கிராமங்கள் தோறும் இவ்வீதி நாடகம் இடம்பெற்று வந்தன. இந்நிலையில் குறித்த சமாசத்தின் தலைவரின் செயற்பாடுகள் காரணமாக வீதி நாடாகத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு கரைச்சி பிரதேச செயலகத்தினாலும் மாவட்டசெயலகத்தினாலும் அறிவிக்கப்பட்டிருந்தது, இந்நிலையில் 10 நாடகங்கள் எந்த ஒரு அனுமதியுமின்றி போடப்பட்டதாகவும் ஏற்கனவே போடப்பட்ட நாடகங்களிலும் சுமார் 10 இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட தொகை நிதி மோசடி செய்யப்பட்டிப்பதாகவும் இது தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லவிருப்பதாகவும் கரைச்சி கிராம அபிவிருத்திச் சங்கங்களின் உபசெயலாளர் க.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பொருளாளரின் அனுமதியின்றி தலைவரின் தன்னிச்சையான செயற்பாட்டின் அடிப்படையில் இந்தப்பணம் செலவிடப்பட்டுள்ளதாகவும் இதில் காட்டப்பட்டுள்ள செலவு விபரங்கள் உரிய முறையில் உரிய விலைகளில் காட்டப்படவில்லை.

இதேவேளை சமாசத்தின் கலந்துரையாடல் ஒன்றும் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போதும் இந்த மோசடி தொடர்பாக எழுந்த சர்ச்சை காரணமாக பொருளாளர், உபசெயலாளர் ஏனைய உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்து கூட்டத்தில் இருந்து வெளி யேறிவிட்டனர் என உப செயலாளர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் கிளிநொச்சி கல்வி வலயத்தில் நெருக்கடியான காலகட்டத்தில் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய மறைந்த வலயக் கல்விப்பணிப்பாளர் ஒருவரின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட நிதியமானது கல்வி வளாச்சிக்காக நிதி சேகரிக்கும் பொருட்டு ஆயிரம், ஐந்நூறு, நூறு ரூபா பெறுமதிகளில் அதிஸ்ட இலாபச் சீட்டு புத்தகங்களை விற்பனை செய்துள்ளனர்.

இதில் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களில் சில அதிஸ்ட பார்ப்பதற்கு உள்வாங்கப்படவில்லை. இதன் மூலம் விற்பனை செய்யப்பட்டு பெறப்பட்ட பணம கணக்குகளுக்கு சேர்த்துக்கொள்ளப்படவில்லை. குறிப்பாக 751 தொடக்கம் 800 மற்றும் 1001 தொடக்கம் 1100 வரையான புத்தகங்கள் உள்ளிட்ட சில அதிஸ்ட இலாபச் சீட்டு புத்தகங்களே இவ்வாறு சீட்டிழுப்புக்கு சேர்த்துக் கொள்ளப்படாது காணப்படுகிறது. இதன் மூலம் இந்த பணம் சிலரால் கையாடல் செய்யபட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் பணி எனும் பெயரால் பாதிக்கப்ட்ட மக்களிடம் பல்வேறு வழிகளில் பணம் சேகரித்து அதனை தங்களின் பைகளில் போட்டுக்கொள்பவர்கள் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேணடும் எனவும் அந்தந்தச் சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுகின்றனர். (29)

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை, பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் A. அருந்தவநேசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக எஸ்.உதயகுமார் (வலயக்கல்விப் பணிப்பாளர்) சிறப்பு விருந்தினராக பி.பூபாலசிங்கம் ஓய்வு நிலை அதிபர் (இடைக்காடு மகா வித்தியாலயம்) கௌரவ விருந்தினராக ஐ.மகேசன் (பழைய மாணவன் ஓய்வுநிலை மின் எந்திரி சிமெந்துக்கூட்டுத்தாபனம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பாடசாலைக்கீதம், கொடியேற்றலுடன் ஆரம்பமாகவுள்ள விளையாட்டு நிகழ்விற்கு பழைய மாணவர்கள், பெற்றோர், கிராமத்துப் பெரியோர் ஆகியோர் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டு வீர, வீராங்கனைகளுக்கு உற்சாகமூட்டுமாறு பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (85)

◆◆◆

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று, அதிபர் ஜி.விமலன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் பி.ப1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக கல்வி அமைச்சின் ஓட்க்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.ராஜேந்திரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய ட.பிரகாசன் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வுகளில் வெற்றி பெறும் வீர் வீராங்கனைகளுக்கான பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி.ச.ராஜேந்திரன் வழங்கி வைப்பார்.

# சிறந்த கோழி வளர்ப்பு அம்பாள்குளம் பெண்ணுக்கு விருது



வடமாகாண விவசாய அமைச்சால் நடாத்தப்பட்ட உழவர் திருநாள் போட்டியில், வடமாகாணத்தில் சிறந்த கோழி வளர்ப்பாளருக்கான விருதை இராமன் சுதர்சினி என்ற பெண் பெற்றுக்கொண்டார்.

யுத்தத்தில் கணவனை இழநத இவர், தனது இரண்டு பிள்ளைகளுடன் அம்பாள்புரத்தில் வசித்து வருகின்றார். இவர் தனது வீட்டில் கோழிப்பண்ணை ஒன்றை உருவாக்கி நடாத்தி வருகின்றார். இவரது கோழிப்பண்ணையை நாளடைவில் விரிவாக்கிய இவர், தனது ஊரைச் சேர்ந்த 4 பெண்களுக்கு கோழிப் பண்ணையில் தொழில் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

அவர்கள் நால்வருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா மாதாந்த வேதனமாக வழங்கி வருகின்றார். கோழிகளின் கழிவுகளை விவசாயத்துக்குப் பயன்படுத்தி சிறந்த முறையில் சுற்றுச்சூழலையும் பாதுகாக்கின்றார்.

இதனைக் கருத்திற்கொண்டு வடமாகாணத்தின் சிறந்த கோழிப் பண்ணையாளராக இவர் தெரிவு செயயப்பட்டார்.

வடமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில், வவுனியா நகரசபை மண்டபத்தில் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற உழவர் விழா நிகழ்வில் வைத்து, இவருக்கான விருதை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் வழங்கினார்.

# நீரிழிவு நோயாளர்கள் வடமாகாணத்தில் அதிகரிப்பு

## வைத்திய நிபுணர் லக்ஸ்மன் தகவல்

வடமாகாணத்தில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக யாழ்போதனா வைத்தியசாலை இதய சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பூ.லக்ஸ்மன் தெரிவித்தார் அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில,

இதய நோய்க்குரிய ஏது நிலைக் காரணிகளின் ஒன்றாக நீரிழிவு நோய் இனம் காணப்படடுள்ள நிலையில் வடமாகாணத்தில் நீரிழிவு நோய் என்பது பாரிய் பிரச்சினையாகவுள்ளது. ஆசிய நாடுகளிலேயே இலங்கையில் நீரிழிவு நோயாளிகள் அதிகம். அதிலும் வடமாகாணத்தில் நோயாளர்கள் அதிகளவில் உள்ளார்கள்.

மாரடைப்பு நோய்க்குரிய ஏது நிலைக் காரணிகளாக நீரிழிவு நோய், கொலஸ்ரோல், இரத்தத்தில் கொழுப்பு படிதல், புகைத்தல் போன்ற பல்வேறு காரணிகள் உள்ளன.

நேரடியாக ஒரு நோயாளிக்கு இதயநோய் ஏற்படுவது என்பது குறைவு இந்த ஏதுநிலை காரணிகளே இந்நோயை தோற்றுவித்து வருகின்றது இளவயதில் இதயநோய் ஏற்படுவதற்கு இந்த ஏதுநிலைக் காரணிகளே அடிப்படையாக அமைகின்றன.

தற்போது மக்கள் மத்தியில் சற்று விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. ஏனெனில் முன்னர் மாரடைப்பு வந்த பின்னரே வைத்தியசாலைக்கு வருவார்கள். ஆனால் தற்போது நெஞ்சு நோ இருந்தாலே வைத்திய சாலையை நாடுகின்றார்கள்.

நீரிழிவு, கொலஸ்ரோல் நோயாளிகள் அடிக்கடி சோதனை செய்வதன் மூலம் ஆரம்பத்திலேயே நோயைக் கண்டுபிடித்து சிகிச்சையளிக்கக் கூடியதாகவுள்ளது என அவர் தெரிவித்தார்

# வரிச் சிறப்புரிமை அட்டை பெறுவோர் யாழ். மாவட்டத்தில் அதிகரிப்பு

யாழ்.மாவட்டத்தில் கடந்த வரி மதிப்பீட்டாண்டை விட இந்த வருடத்தில் (2013 2014) சிறப்புரிமை அட்டையை பெறும் வரிகடடுபவர்கள் தொகை அதிகரித்துள்ளதாக யாழ். பிராந்திய உள்நாட்டு இறைவரித் திணைககள பொறுப்பு உதவி ஆணையாளர் திருமதி சு.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது "யாழ். மாவட்டத்தில் வரி மதிப்பீட்டாண்டு 2013 2014 சிறப்புரிமை அட்டையாகிய தங்க அட்டை பெற 6 பேரும், வெள்ளி அட்டை பெற 18 பேரும் தகுதி பெற்றுள்ளனர் என்றார்.

25 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வரி அல்லது குறித்த திகதிக்கு முன்னர் (30 நவம்பர் 2014) உரிய முறையில் வருமான விபரத்திரட்டை சமர்ப்பித்த வரி செலுத்துநர்களை கௌரவிக்கும் வகையில் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. கடந்த வரி மதிப்பீட்டாண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் உரிய திகதியில் விபரத்திரட்டை சமர்ப்பித்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி நடைமுறைக்கு வந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்கான புரள்வு எல்லை ஆண்டுக்கு 15 மில்லியன் ரூபாய் ஆகும. இதுவரை காலமும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி திரட்டுமக்களை சமர்ப்பிக்காத வரி செலுத்துநர்கள் அதனை சமர்ப்பித்து தண்டப்பணம் விதிப்பு மற்றும் சட்டநடவடிக்கை எடுத்தல் என்பவற்றைத் தவிர்க்க முடியும். இதுவரை வரி மதிப்பீட்டாண்டில் விபரத்திரட்டை சமர்பிக்காதுள்ளவர்கள் உடனடியாக விபரத்திரட்டை சமர்ப்பிப்பதன் மூலம் தண்டப்பணம் விதித்தல் மற்றும் சட்டநடவடிக்கை எடுத்தல் போன்றவற்றை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மாடுகள் வழங்கல்

தமிழ் பௌத்த சங்கத்தினால் எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு பௌர்ணமி தினத்தன்று மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் 100 பசு மாடுகள் வழங்கப்படவுள்ளன.

இதே அமைப்பினர் கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் 100 பசு மாடுகளை வழங்கியிருந்தன. பசுக்களை வளர்ப்போம் சுத்தமான பாலை அருந்துவோம் என்ற தொனியில் இவ்வமைப்பு பசுக்களை வழங்கி வருகின்றன.

பசு மாடுகள் தேவைப்பட்டோர் தமிழ், பௌத்த சங்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

### நிரோஜன், கிருபாகரன், மதுஷன் சிறப்பான செயற்பாடு

# யாழ். மத்தி பெரு வெற்றி

(யாழ்ப்பாணம்)


நிரோஜன், மதுஷன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் ஆறு ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக் கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி கடந்த 27,28ஆம் திகதி களில் யாழ். மத்திய கல்லூரி மைதானத் தில் நடைபெற்றது. இதில் மதுகம ஆனந்த சாஸ்திராலய மத்திய மகாவித்தியாலய அணியும் யாழ். மத்திய கல்லூரி அணி யும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆனந்த சாஸ்திராலய மத்திய மகாவித்தி யாலய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இந் நிலையில் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த நிரோஜன், கிருபாகரன் ஆகி யோர் பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை வேகமாக அதிகரித்த னர். இதில் அதிரடியாக ஆடிய நிரோஜன் ஏழு ஓட்டங்களால் சதமடிக்கும் வாய்ப்பைக் கோட்டைவிட்டார். ஆறாவது விக்கெட்டுக் காக இணைந்த இந்த ஜோடி 124 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. நிறைவில் யாழ் மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக் களையும் இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரோஜன் 48 பந்துகளை எதிர்கொண்டு எட்டு சிக்ஸர் கள், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 93, கிருபாகரன் 68 பந்துகளை எதிர்கொண்டு ஏழு சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 80, திரேசன் 27 ஓட்டங் களைப் பெற்றனர். பந்து வீச்சில் உமேஷ் கவுஸ் நான்கு விக்கெட்டுக்களைக் கைப் பற்றினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய ஆனந்தா சாஸ்திராலய மத்திய மகாவித்தி யாலய அணி மதுஷனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக் கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதி யில் ஆனந்தா சஸ்திராலய மத்திய மகா வித்தியாலய அணி முதல் இனிங்ஸிற் காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தரங்க மதுவந்த 41, அசான் டினுசான் 20 ஓட் டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மது ஷன் 32 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு, அலன்ரன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

ஆனந்தா சஸ்திராலய மத்திய மச வித்தியாலய அணி 147 ஓட்டங்கள் பின் னிலையில் இருந்தமையால் யாழ். மத் திய கல்லூரி அணியால் மீண்டும் துடுப் பாட பணிக்கப்பட்டது. இதற்கமைய இரண் டாவது இனிங்ஸிற்காக ஆடிய ஆனந்தா சஸ்திராலய மத்திய மகாவித்தியாலய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்று இனிங்ஸ் தோல்வியைத் தழுவியது. இதில் டமித் 29, அசான் டினுசன், பிரசாந் ஆகியோர் தலா 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதுஷன் 45 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, அலன்ராஜ் இரு விக் கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் ஆறு ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (17)



நிரோஜன்



மதுஷன்

## வீதியோட்டம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி யின் வீதியோட்டம் நாளை மறுதினம் கல்லூரி முன்றிலில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடாத் தப்படும் வீதியோட்ட நிகழ்வு இம்முறை சிறப்புற நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இதில் கடந்த ஆண்டில் பங்கு பற்றி வீர,வீராங்கனைகளின் எண்ணிக்கையை விட அதிகளவிலானோர் இம்முறை கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

நாளை காலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ள இவ் வீதியோட்ட நிகழ்விற்கு கல்லூரி அதிபர் மணி சேகரம் தலைமை வகிக்கவுள்ளார்.

இதேவேளை, இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான ஏற்பாடுகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன. இதில் வீர, வீராங்கனைகள் ஐந்து இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு தொடர் பயிற்சிகள் ஈடு பட்டு வருவதனையும் சிறப்பான முறை யில் இல்லங்களை அமைத்து வருவ தனையும் அவதானிக்கக் கூடியதாகவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (93)

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர்

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி யின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நவரட்ணராஜா விளையாட்டு மைதானத் தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ். வேலழகன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக கோப் பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் முன் னாள் அதிபர் த. முத்துக்குமாரசாமி, சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை ஆசிரி யர் திருமதி ய. சந்திரலிங்கம், கோப்பாய் மத்தி கிராம அலுவலர் திருமதி ர. றஜீ வன், கௌரவ விருந்தினர்களாக கல்லூரி யின் பழைய மாணவர்களான தனராஜ், சிவதாஜ் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

## வீதியோட்டம்; வெற்றியீட்டியோர்

(கற்சிலைமடு)

கற்சிலைமடு அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன் னிட்டு நடாத்தப்பட்ட மரதன் போட்டியில் கோகுலன், குவேந்தினி ஆகியோர் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டனர்.

இம்மரதன் ஓட்டப் போட்டி கடந்த வாரம் பாடசாலை முன்றிலில் ஆரம்பமாகி அதே இடத்தில் நிறைவடைந்தது. ஆண், பெண் என இரு பாலாரும் பங்கு கொண்ட இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை கோகுலன், இரண்டாமிடத்தை லக்கீரன், மூன்றா மிடத்தை கஜீபன் ஆகியோர் பிடித்துக் கொண்டனர்.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை குவேந்தினி, இரண்டாமிடத்தை விதுசா, மூன்றாமிடத்தை அனுசியா ஆகியோர் பிடித்துக் கொண்டனர்.

இதேவேளை, இப்பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி விரைவில் நடை பெறவுள்ளதாகவும், இதில் வீர,வீராங் கனைகள் ஆர்வமுடன் பயிற்சிகளில் ஈடு பட்டு வருவதாகவும் பாடசாலைச் சமூ கம் தெரிவித்துள்ளது.

# யாழ். மாவட்ட வீரர்களின் ஏக்கம் நிறைவேறுமா?

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டுச் செயல கத்தினால் வருடா வருடம் நடாத்தப் பட்டு வரும் மாவட்ட விளையாட்டு விழா கடந்த வருடம் நடாத்தப்படாமையால் மாவட்ட விளையாட்டு ஆர்வலர்கள் மற்றும் வீர,வீராங்கனைகள் உள்ளிட் டோர் விசனமடைந்துள்ளனர்.

விளையாட்டுத் தரம் கட்டியெழுப்பப் படவேண்டுமாயின் படிப்படியான படிநிலை களை அது கடந்து செல்லும் பட்சத்தி லேயே வீர,வீராங்கனைகளின் திறன் அதில் வெளிப்படும். அதாவது, பிர தேசம், மாவட்டம், மாகாணம், தேசி யம், சர்வதேசம் என அதன் பரிமாணம் விரிந்து செல்லும். இதன் அடிப்படையில் செல்லும் பட்சத்திலேயே சிறந்த வீர, வீராங்கனைகளை உருவாக்கவும், இனங் காணவும் முடியும். ஆனால், யாழ். மாவட்டத்தின் நிலைமையோ விளை யாட்டு விழாக்களையோ நடாத்த முடி யாதளவிற்கு இருக்கின்றது.

யாழ். மாவட்டத்தில் வீர,வீராங்கனை களின் திறன்களை வெளிக்கொணர்வதில் முழுவீச்சில் செயற்படவேண்டிய மாவட்ட விளையாட்டுச் செயலகமோ அல்லது மாகாண விளையாட்டுச் செயலகமோ இதில் அர்ப்பணிப்புடன் செயற்படுவ தாகத் தெரியவில்லையென விளை யாட்டு வல்லுநர்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

வருடா வருடம் நடாத்தப்படுகின்ற விளை யாட்டு விழா கடந்த ஆண்டு யாழ். மாவட்ட செயலகத்தினால் நடாத்தப்பட வில்லை. மாவட்ட விளையாட்டு விழா வின் தெரிவு நிகழ்வுகள் நடைபெற்ற போதிலும் இறுதிப் போட்டி நடாத்தப் படவில்லை. இதில் 15 பிரதேச செய லகங்களிலிருந்து 40 வீர,வீராங்கனை களே பங்குகொண்டுள்ளனர். இதேபோன்று கோப்பாய், மருதங்கேணி, நல்லூர் பிர தேச செயலக விளையாட்டு விழாக்கள் கடந்த ஆண்டு நடாத்தப்படவில்லை. அத்துடன் மாவட்ட மட்ட கால்பந்து, கூடைப்பந்து போன்ற போட்டிகளும் கடந்த வருடம் நடாத்தப்படவில்லை. இவ்வாறான நிலைமைகள் தொடரும் பட்சத்தில் யாழ். மாவட்ட விளையாட்டு வீர,வீராங்கனைகளின் நிலை பெரும் கவலையளிக்கும் ஒன்றாகவே இருக்கும் என விளையாட்டு வல்லுநர்கள் தெரி விக்கின்றனர்.

வீர,வீராங்கனைகள் ஒவ்வொரு நிலை களை அடையும் போதே அவர்கள் உத்வேகம் பெறுகிறார்கள். சாதிக்கவேண் டும் என்ற ஆர்வம் பிறக்கின்றது. பிர தேச மட்டத்தில் தங்கம் வென்றவர் மாவட்ட நிலையிலும் தங்கம் வெல்ல வேண்டும் என்ற வெறி உருவாகும். மாவட்ட நிலையில் தங்கம் வென்றவர் மாகாணத்திலோ, தேசியத்திலோ தங்கம் வெல்ல வேண்டும் என்ற இலக்கு அவருக்குள் நிர்ணயிக்கப்படுகிறது. இதில் ஒவ்வொரு நிலையிலும் வீர,வீராங்கனை களை கவரும் வகையில் மாவட்ட செயலகமோ அல்லது மாகாண செயல- கமோ கவனமுடன் செயற்படவேண்டும். இவற்றை விடுத்து மாவட்ட நிலைப் போட்டிகளே நடாத்தப்பட முடியாத நிலை உருவாகியிருக்கின்றதென்றால் வீர,வீராங்கனைகளின் விளையாட்டு ஆர்வத்தை, திறமையை எப்படி வளர்த் தெடுக்க முடியும். எனவே, இவற்றைச் சீர்செய்யும் வகையில் உரிய நடவ டிக்கை எடுக்கப்படவேண்டும். இவ்வாறு எடுக்கும் பட்சத்திலேயே யாழ். மாவட் டத்தின் விளையாட்டுத் தரத்தை மேல் நிலை நோக்கி கட்டியெழுப்ப முடியும் என விளையாட்டு வல்லுநர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (93)

## 5 விக்கெட்டுக்களால் ஜொலிஸ்ரார் வெற்றி



(கொக்குவில்)

விக்ரம், ராஜன், கங்கு வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடரின் ஜொலிஸ்ரார் அணி முதல் வெற்றியைப் பதிவு செய்தது. கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்டு வரும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் ஜொலிஸ்ரார் மற்றும் சென்றலைட்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென்றலைட்ஸ் அணி 15.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வதுஷணன் 20 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கல்கோபன் இரண்டு, மதுஷன், பகீரதன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 107 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி 21.2 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மதுஷன் 60 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் வதுஷணன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

# பண்டாரநாயக்க தம்பதிகளின் அரசியலும் அவர்களது பிள்ளைகளின் அரசியலும்

- புனிதன் -



பண்டாரநாயக்க – சிறீமாவோ

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்கள், ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தபோதும், அக்கட்சி பின்பற்றிய ஏகாதிபத்திய சார்புக் கொள்கைக்கு எதிராக இருந்தார். அதன்காரணமாக சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கமான ஐ.தே.கவின் டி.எஸ். சேனநாயக்க அமைச்சரவையில் தான் வகித்து வந்த சுகாதார அமைச்சர் பதவியைத் துறந்துவிட்டு இலங்கை மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியை 1951இல் நிறுவினார்.

அவரது கட்சி மிகக்குறுகிய காலத்தில் அதாவது 1956 பொதுத்தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் அவரது அரசியல் பயணத்தைத் தொடரவிடாது பிற்போக்கு சக்திகள் அவரை 1959 செப்ரெம்பரில் சுட்டுப் படுகொலை செய்தன.

இருந்த போதும் குறுகிய காலமான 3 வருடங்களில் பண்டாரநாயக்க, நாட்டை கணிசமான அளவு ஏகாதிபத்தியப் பிடியிலிருந்தும், நிலப்பிரபுத்துவப் பிடியிலிருந்தும் விடுவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அதேபோல, அவரது மரணத்துக்குப் பின்னர் கட்சியினதும் நாட்டினதும் பொறுப்பை ஏற்ற அவரது மனைவி சிறீ-மாவோ அம்மையாரும் நடந்து கொண்டார். சிறீமாவோ, தனது கணவர் பண்டாரநாயக்க போன்று இங்கிலாந்து சென்று கல்வி கற்றவராக இல்லாதபோதும், துணிகரமாக கட்சியினதும் நாட்டினதும் தலைமைப் பொறுப்பை ஏற்று உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையையும் பெற்றுக் கொண்டார்.

அதைவிட முக்கியமானது, தனது கணவர் ஆரம்பித்து வைத்த ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் பணியை துணிகரமாகவும், இடைவெளி இன்றியும் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றார். அதனால்தான் பிற்போக்கு சக்திகள் 1962இல் ஒரு இராணுவச் சதியின் மூலம் அவரது அரசைக் கவிழ்க்க முயன்றபோதும் தோற்றுப் போயினர்.

ஆனால் பிற்போக்கு சக்திகள் தொடர்ந்தும் முயன்று 1964இல் அவரது அரசு கொண்டு வந்த லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தைத் தேசியமயமாக்கும் மசோதாவில் அவரது அரசைத் தோற்கடித்து வெற்றி பெற்றனர்.

1977 வெற்றி பெற்ற ஐ.தே.கவுக்குத் தலைமைதாங்கிய ஏகாதிபத்திய சார்பாளரான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, தனது அரசுக்கு எவ்விதமான எதிர்ப்பையும் இல்லாமல் செய்வதற்காகவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஒழித்துக் கட்டுவதற்காகவும், சிறீமாவோ பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமையைப் பறித்து அதன் மூலம் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் பறித்தார்.

பண்டாரநாயக்கவும் சரி, அவருக்குப் பின்னர் அவரது மனைவி சிறீமாவோவும் சரி, என்ன நெருக்கடிகள் வந்தபோதும் தமது ஏகாதிபத்திய எதிர்ப்பையோ அல்லது ஏகாதிபத்திய சார்புக் கட்சியான ஐ.தே.கவுக் கான எதிர்ப்பையோ ஒருபோதும் கைவிட வில்லை.

ஆனால் அவர்களது பிள்ளைகளின் அரசியல் வரலாறோ அவர்கள் வகுத்த அரசியல் பாதையிலிருந்து தலைகீழாகச் சென்று முடிந்திருக்கிறது.

சிறீமாவோவுக்குப் பின்னர் பண்டாரநாயக்க குடும்பத்தின் அரசியல் வாரிசாக வர வேண்டிய அவரது மகன் அனுர பண்டாரநாயக்க, தனது தந்தையினதும் தாயினதும் அரசியல் வைரியான ஐ.தே.கவில் சேர்ந்து தமது குடும்ப அரசியல் கௌரவத்தை மட்டுமின்றி, தனது வாழ்வையும் அழித்துக் கொண்டார்.

அவரது தவறான போக்கே தாயார் சிறீமாவோவின் மரணத்துக்கு காரணமாக அமைந்தது என்ற அபிப்பிராயமும் உண்டு. (2000 ஆண்டுப் பொதுத்தேர்தலில் அனுர ஐ.தே.கவில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டார். இது சிறீமாவோவுக்கு ஒரு தர்ம சங்கடமான நிலையைத் தோற்றுவித்தது. அவர் ஐ.தே.கவுக்கு எதிரி என்றாலும் மகன் அக்கட்சியில் போட்டியிடுவதால், மகனில் அமோக பற்றுதல் கொண்ட அவர் மகனுக்குத் தான் வாக்களிக்க வேண்டும். எனவே தான் செய்யக்கூடாத வேலையைச் செய்ய வேண்டிய, அதாவது ஐ.தே.கவின் யானைச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. தனது மனச்சாட்சிக்கு எதிராக வாக்களித்ததாலோ என்னவோ, அவர் தனது தொகுதியான அத்தனகலவுக்குச் சென்று வாக்களித்துவிட்டு திரும்பி வரும் வழியில் அவர் உயிர் பிரிந்துவிட்டது)

அனுர சென்ற பாதையிலேயே இப்பொழுது பண்டாரநாயக்க தம்பதிகளின் மகளான சந்திரிகாவும் செல்லத் தொடங்கியுள்ளார். தனது காலஞ்சென்ற கணவர் விஜயகுமாரதுங்கவுடன் சேர்ந்து சிறீலங்கா மக்கள் கட்சி என்ற ஒரு கட்சியை ஆரம்பித்த சந்திரிகாவை, அவரது கணவரை ஜே.வி.பியினர் சுட்டுப் படுகொலை செய்த பின்னர், தாயார் சிறீமாவோ திரும்பவும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குக் கொண்டு வந்து நாட்டின் ஜனாதிபதி ஆக்கினார். ஆனால் சந்திரிகா, இன்று தனது குடும்ப வாரிசுகளுக்கு அரசியல் அந்தஸ்து பெற்றுக் கொடுப்பதற்காக தமது குடும்பத்தின் அரசியல் எதிரியான ஐ.தே.கவுடன் சந்தர்ப்பவாத ரீதியில் கரம் கோர்த்துள்ளார்.

பண்டாரநாயக்கவும் அவரது மனைவி சிறீமாவோவும் தொடக்கி வைத்த ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஐ.தே.க எதிர்ப்பு என்ற அரசியல் மரபை எப்பொழுது அவர்களுடைய பிள்ளைகள் கைவிட்டார்களோ, அப்பொழுதே அவர்கள் பண்டாரநாயக்க குடும்பத்தின் அரசியல் வாரிசுகள் என்ற தகுதியையும் இழந்துவிட்டார்கள். எனவே சந்திரிகாவின் தற்போதைய சந்தர்ப்பவாத அரசியல் பயணம் தொடர்ந்து செல்லுமா என்பது சந்தேகத்துக்கு உரிய ஒன்றாகவே இருக்கின்றது.

(நன்றி: வானவில் 49)

# சமூகங்களும் சண்டைகளும்

உலகில் குழுவாக வாழ்ந்து பழகிய மனிதன் தன்னை ஏதேனும் ஒரு குழுவிற்குள் அடையாளப்படுத்த முனைவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று தனக்கான ஒரு நட்பு சூழலை உருவாக்கிப் பாதுகாப்பாக இருக்கவும், மற்றொன்று குழுவாக வேட்டையாடி உண்ணவும் என்று வகுக்கலாம்.

காலப்போக்கில் பல காரணங்கள் இக்குழுவை உருவாக்கத் தேவைப்பட்டது. தொழில் பாதுகாப்பிற்குச் சாதிகளும், வழிபாட்டு முறைகளின் பாதுகாப்பிற்கு மதங்களும், வாழ்வியல் பாதுகாப்பிற்கு இனங்களும், அதிகாரங்களுக்கு நாடுகளும் என பல்வேறு குழுக்கள் உருவானாலும், ஒன்றுக்குள் ஒன்றாக முட்டிக்கொண்டு சண்டைகளும் சேர்ந்தே உருவானது. தெருச்சண்டையில் தொடங்கி உலகப்போர்வரை வரலாறுகள் நீண்டுள்ளன.

சண்டைக்கார வீட்டில் குடியிருப்பவர் என்றால் குழாயில் தண்ணீர் விடமாட்டோம், குடிகாரரின் பிள்ளை என்றால் நமது பிள்ளையைச் சேரவிடமாட்டோம் என்று தொடங்கி ஒருவரின் மீதுள்ள வெறுப்பை வேறொருவரிடம் காட்டும் குணத்தின் நீட்சியே ஒரு குழுவின் மீதுள்ள கோபத்தை அதன் பலவீனமானவர்களிடம் காட்டுதலாகும்.

ஆயுதமில்லாத எதிரியைக்கூட பலவீனமானவராகக் கருதி இன்று போய் நாளை வா என்பது புராணக் கால மரபு. இருநாடுகளின் போரின் போது பலவீனமானவர்களான பெண்களையும் குழந்தைகளையும் துன்புறுத்தக் கூடாது என்ற கொள்கை கொண்டது நமது சங்க காலமரபு. அதன் காரணமாகவே போர்களின் போது அப்பாவி மக்களைப் பிணையாகப் பிடித்து வைக்காதீர்கள் என்றும், முட்கம்பிகளினுள் அடைக்காதீர்கள் என்றும் குரல் எழுப்புகிறோம்.

ஆனால் இன்று ஒரு குழுவாக மாறிவிட்டால் கட்டுக்கடங்காத சுதந்திரமும் ஆற்றலும் வந்துவிடுகிறது. குழுவாக நடக்கும் வன்முறைகள் சட்டரீதியாக கலவரம் என்ற அழைக்கப்பட்டு ஒருவிதப் பாதுகாப்பை வழங்குகிறது. அதனால் உணர்ச்சிப் பெருக்கால் எதிரணியின் சாயல் கொண்ட மக்களுடன் மோதி அமைதியடைந்து கொள்கிறோம்.

ஒரு குழு மற்றொரு குழுவின் செயலுக்குச் சம்பந்தமில்லாதவர்களைக் காயப்படுத்துதல் தொடர்கிறது. "இங்க அடிச்சா அங்க வலிக்கும்" என்ற விந்தையான கொள்கையாகயிருக்கலாம். அறியாமை என்றாலும் இதுவொருவகையில் இயலாமையின் வெளிப்பாடு. ஆனால் நிச்சயமாக



தீர்வாகாது. பிரச்சினை மேலும் மேலும் அதிகரிக்கவே செய்யும்.

மேலும் யோசித்தால் ஒரு சமூகத்தினர் முன்னொரு காலத்தில் படையெடுத்து வந்து நமது முன்னோர்களைத் தாக்கினார்கள் என்பதற்காக இன்றைக்கு அச்சமூகத்தை வெறுப்பதும், அன்று கட்டாய மதமாற்றம் செய்து கொடுமை செய்தார்கள் என்பதற்காக இன்று அம்மதத்தை அதற்காகத் தூற்றுவதும் ஒப்பு நோக்கில் ஒரேவகைதான்.

அதே தவற்றை இன்று யார் செய்தாலும் தவறுதான். ஆனால் அப்படியில்லாத வாரிசுகள் பாதிக்கப்படக் கூடாது என்பதே வாதம். ஒருவர் செய்த தவறுக்கு வெவ்வேறு காலகட்டத்திலோ பகுதியிலோ இருக்கும் மற்றொருவர் எப்படி பொறுப்பாவார்? உணர்ச்சிவசத்தால் ஒரேமதம், ஒரே ஊர் என இவர்களைத் தொடர்பு படுத்தலாமா? அதே போல மற்றொருவர் செய்த குற்றத்திற்கு நாம் பலியாகத் தயாரா என்ற கேள்வியையும் சிந்திக்க வேண்டும்.

அதே நேரத்தில் பாவம் மட்டுமல்ல லாபமும் அவ்வகையே. ஒன்றும் செய்யாமல் வீணான பெருமைகளைப் பேசிப் பேசி சம்பந்தமில்லாதவர்கள் சலுகைகளைப் பெற்றும் விடுகிறார்கள். முன்பு சிறப்பாக பணியாற்றிய கட்சியின் இன்றைய நிலையைக் கருத்தில் கொள்ளாமல் இன்றும் ஆதரவு அளிப்பதும், சுதந்திரத்திற்குப் போராடிய தியாகிகளின் அடுத்த வாரிசுகளுக்கு இன்றும் கொடி பிடிப்பதும், உழைப்பில்லாமல் தந்தையின் நிழலில் அதிகாரத்தைப் பெற்று நடத்தும் வாரிசு அரசியலும் இதே வகையறாதான்.

அவரவர் வினைப்பயனை அவருக்கே வழங்க வேண்டும். இதன் மூலம் காலங்காலமாகத் தொடரும் வன்மங்களும் விசமங்களும் வேரறுக்கப்படும். யாரும் அடுத்த பிரிவைத் தாக்கித் தங்களை உயர்த்திக் கொள்ளவேண்டிய நிலை அகலும். சாதிப் பெருமைகள் வலுவிழக்கும். மதப் பூசல்களும் மடிந்துபோகும். இன்று என்ன செய்தால் நற்பெயர் கிடைக்கும், எப்படி நம்மால் உதவ முடியும் என்று புதிய தலைமுறை சிந்திக்கத் தொடங்கும்.

உச்சத்திலிருந்தாலும், அச்சத்திலிருந்தாலும் இந்தக் குழுவில் "நீ என்ன செய்தாய்" என்று ஒவ்வொரு தருணத்திலும் கேட்கவேண்டும். இவற்றை உடனே சமநிலைப் படுத்தமுடியாது என்றாலும் காலப்போக்கில் செய்யவேண்டும் என்பதே இன்றைய தேவை.

- நீச்சல்காரன்

# எமீல் லெவஸர்

- வ.மீ.கோபு -

ஜனவரி 21 ஆம் திகதி எமீல் லெவஸரின் பிறந்தநாள்.

யார் அவர்? கேள்விப்பட்டதேயில்லையே என்கிறீர்களா!

எமீல் லெவஸர், காரின் மூத்த முதல் தச்சன். டீஸல் எஞ்ஜினை உருவாக்கி அதற்கு பெயர் கொடுத்த ருடோல்.ப் டீஸலை அறிந்துளோம். காரை உலகிற்கு அறிமுகம் செய்த கார்ள் பென்ஸ் கூட தெரியும் - அவர் பெயரில் பொறியியல் திறனுக்கும் சொகுசுக்கும் புகழ்பெற்ற சிறந்த ஜேர்மானிய கார்களை உலகமே அறியும்.



பென்ஸ் செய்த கார் என்ன? பழைய குதிரைவண்டியில் குதிரையை கழட்டிவிட்டு மூன்றாவது சக்கரத்தை பொருத்தி, ஆசனத்துக்கு கீழே (விசையை) எஞ்ஜினை பொருத்தி, பிரேக்கில்லாத, கியரில்லாத, (அதனால் க்ளட்சும் இல்லாத) சைக்கிள் சங்கிலி வண்டியைத்தான் படைத்தார் கார்ள் பென்ஸ். இதை கார் என்று சொல்வது குறுநில மன்னரை திரிபுவன சக்கரவர்த்தி என்று புலவர்கள் புகழ்ந்தது போலாகும். உலகின் முதல் மீன்பாடி வண்டியை உருவாக்கினார் பென்ஸ்.

அவரை விட அவரது திறமையில் அதிக நம்பிக்கை வைத்திருந்த அவரது மனைவி பெர்த்தா, தனது வரதட்சணை செல்வத்தால் கணவர் கார்ளின் வியாபாரத்தை காப்பாற்றியது போதாது என்று, தன் மகன்களை ஏற்றி, கணவருக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டு, காரை 65 கிலோ மீற்றர் ஓட்டி உலக சாதனை படைத்தார். அது சுவாரசியமான தனிக்கதை.

மேடுகளில் ஏற இந்த வண்டி பட்ட கடினத்தால், அதை சரிப்படுத்த கியர் அமைப்பை காரில் சேர்த்தார் பென்ஸ்.

இந்த மீன்பாடி வண்டிகளையே "கார்" என்று சொல்லி பிற்காலத்தில் ஜேர்மனியின் டெய்மலர் கம்பெனியும் விற்று வந்தது. ஒரு வருடத்திற்கு சில நூறு கார்களே இவர்கள் தயாரித்தனர்.


லெவஸர் இன்றைய காரின் அடிப்படை வடிவம் அமைத்தவர். ஆசனத்தின் கீழே இருந்த எஞ்ஜினை முன்னே வைத்தார். இதனால் ட்ரான்ஸ்மிஷன் ஆகஸல் அமைப்புகள் ஒரு முக்கிய வடிவமும் மாற்றமும் பெற்றன. கியரை ஒன்றிணைத்த கியர் பெட்டியை அறிமுகம் செய்தார். கியர் அமைப்பை சரியாக வேலைப்படுத்த கிளட்சை அறிமுகப்படுத்தினார்.

எஞ்ஜின் பொருத்திய குதிரைவண்டியாக நினைக்காமல் காராக முதலில் கருதி படைத்தவர் எமீல் லெவஸர் என்கிறார் வக்லவ் ஸ்மில், Creating the Twentieth Century என்ற நூலில்.

பெற்றோல் எஞ்ஜினை படைத்த நிக்கலஸ் ஆட்டோவின் நினைவு நாள் ஜனவரி 26.

# கடவுள் இருக்கிறாரா?

இளவயதில் கடவுள் இல்லை என்று வாதிட்டு வருபவர்கள் கூட ஐம்பது வயதைக் கடந்தபிறகு ஆன்மீக நாட்டம் கொண்டவர்களாக மாறிவிடுவதற்கு எத்தனையோ உதாரணங்கள் உண்டு. ஆனால், புகழ்பெற்ற விஞ்ஞானி ஸ்டீபன் ஹொக்கின்ஸ், வயதான காலத்திலும் தன் முடிவை மாற்றிக்கொள்ளாமல், "கடவுள் இல்லை..." என்று அடித்துக் கூறுகிறார். சக்கர நாற்காலியில் தான் வாழ்க்கை என்ற நிலையிலுள்ள இவர், "விஞ்ஞானத்தின் மகத்துவம் அறியாத காலத்தில் கடவுள் உண்டு என்ற நம்பிக்கை பரவியது. நான் நாத்திகன்; விஞ்ஞானத்தை வெல்ல எந்த மதங்களாலும் முடியாது. மனிதனின் வருங்காலத்தை கணிக்கவோ, அவனின் விதியை நிர்ணயம் செய்யவோ உலகில் யாரும் இல்லை. பிரபஞ்சத்தை யாரும் படைக்கவில்லை. கடவுள் தான் பிரபஞ்சத்தை படைத்ததாக மதங்கள் கூறுவது உண்மை அல்ல..." என்று தனது முதுமையிலும் அடித்துக் கூறுகிறார்.



# திருமந்திரம்!



"ஆர்க்கும் இடுமின்
அவர் இவர் என்னன்மின்
பார்த்து இருந்து உண்மின்
பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை உடையீர் விரைந்து
ஒல்லை உண்ணன் மின்
காக்கை கரைந்து உண்ணும்
காலம் அறிமினே."

என்பது திருமந்திரம். இதன் பொருள்: காக்கை கூட உணவு கிடைத்ததும், தன் இனத்தைக் கூவி அழைத்து, பகிர்ந்து உண்கிறது. அதைப் பார்த்தாவது, நாம் உணர வேண்டாமா... பசித்து வருபவர் யாராக இருந்தால் என்ன... எந்த பேதமும் பாராமல் உணவு கொடுங்கள். விருந்தினரை எதிர்பார்த்து, உபசரித்து உண்ணுங்கள். பழையதை வைத்துப் பாதுகாக்காதீர்கள்! அவசர அவசரமாக உண்ணாதீர்கள் அடுத்தவர்களுக்குக் கொடுத்து உண்ணுங்கள்.

# முஸ்லிம்களுக்கு எதிராக சிங்களத் தரப்பிடமா முறையீடு?



## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

மைத்திரிபால சிறிசேன பொல்லுக் குடுத்து அடி வாங்கப் போறார் எண்டு இந்தப் பத்தியிலை ஒருக்கா எழுதினனான் பாருங்கோ! அவளைத் தொடுவானேன் கவலைப்படுவானேன் எண்டு அவர் நினைக்கிற மாதிரித்தான் காரியங்கள் நடக்குது.

கிழக்கு மாகாண சபை விசியத்திலை கூட்டமைப்பு தாங்களே முதலமைச்சர் கதிரையிலை உக்கார வேணும் எண்டு அடம் பிடிச்சுக் கொண்டு நிக்குது. ஜனாதிபதியைச் சந்திச்சு முதலமைச்சர் பதவியைத் தங்களுக்கே தர வேணும் எண்டு அடம் பிடிச்சிருக்கினை. ஆனால் 'உங்கடை பிரச்சினை விளங்குது பாருங்கோ. ஆனால் மாகாண சபை விசியத்திலை தலையிடுறேல்லை எண்டது என்ரை பொலிசி' எண்டு சொல்லி நைசாய் நழுவீட்டார்.

அவருந்தான் என்ன செய்யிறது? ஏறச் சொன்னால் கூட்டமைப்புக்குக் கோவம். இறங்கச் சொன்னால் முஸ்லிம் காங்கிரசுக்குக் கோவம். அதைவிட பேசாமல் இருக்கிறதே மேல் எண்டு நினைச்சிட்டார்.

கூட்டமைப்பின்ரை சார்பிலை மாகாண சபை எலெக்சனிலை நிண்டு தகிடுதத்தங்கள் செய்த தம்பிராசா அண்மையிலை ஒரு தொலைக்காட்சியிலை பேட்டி குடுத்திருந்தார். அப்ப அவர் கிழக்கு மாகாண சபையை முஸ்லிம்கள் கூட்டமைப்புக்கு விட்டுத் தர வேணும் எண்டு கேட்டு அதுக்கான காரணத்தையும் சொல்லியிருக்கிறார்.

அது என்னெண்டால் முஸ்லிம்கள் மூண்டு அமைச்சுப் பதவியளை எடுத்து வச்சிருக்கினை. அதனாலை மாகாண சபையை கூட்டமைப்புக்குத் தர வேணும் எண்டது அவற்றை கோரிக்கை. உங்களை ஆரேனும் அமைச்சுப் பதவியை எடுக்க வேண்டாம் எண்டு சொன்னவையே? எண்டு முஸ்லிம் ஒருத்தர் கேக்கிறார்.

அமைச்சுப் பதவியை எடுக்கிறதிலை இரண்டு பிரச்சினை. ஒண்டு அமைச்சரானால் மக்கள் நலன் நோக்கி அதைச் செயற்படுத்திறது எப்பிடியெண்ட தயக்கம். இப்ப பார்த்தீங்களெண்டால் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு அமைச்சை எடுக்கினையெண்டு வச்சுக் கொள்ளுவம். உயர் பாதுகாப்பு வலயத்துக்குள்ளை சனங்களை மீளக் குடியேற்றேலாது எண்டால் சனங்கள் கேள்வி கேக்கும். அதுக்குப் பதில் சொல்லேலாது.

பாதிக்கப்பட்ட சனங்களுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு உதவியளைச் செய்ய முடியாமல் போனால் முந்தி இருந்தவையோடை ஒப்பிட்டுக் கதைக்கும். எனவே உசுப்பேத்திப் பேசின வாயாலையே சனங்களின்ரை கேள்வியளுக்குப் பதில் சொல்லேலாமல் திண்டாட வேண்டி வரும். அதாலை அமைச்சுப் பதவியளை எடுக்கேலாது.

மற்றது அமைச்சுப் பதவியெண்டு வந்தால் கூட்டமைப்புக்குள்ளை குத்து வெட்டுத் தொடங்கி விடும். இப்பவே சுமந்திரன் அமைச்சராகப் போறார் எண்டவுடனை ரெலோவும், ஈ.பி.ஆர்.எல்.எப்பும் அப்பிடிச் செய்யேலாது எண்டு போர்க்கொடி தூக்கினவை. அமைச்சுப் பதவி எண்டது கூட்டமைப்பின்ரை கொள்கை இல்லையெண்டு அடிச்சுப் பேசினவை.

இந்த நிலையிலை அமைச்சுப் பதவியெண்டது கூட்டமைப்புக்கு வைக்கிற ஆப்பு எண்டது எல்லாருக்கும் தெரிஞ்சதே! எனவே, தம்பிராசா கேக்கிறது பாண்டவர் அஞ்சு வீடெண்டாலுந் தா எண்டு கேட்ட கதைதான் பாருங்கோ.

இப்ப என்னடாவெண்டால் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின்ரை பொறுப்பிலை இருந்த பனை அபிவிருத்திச் சபையை றிசாத் பதியுதீன் தன்ரை பொறுப்பிலை எடுக்க வெளிக்கிட்டிட்டார். ஏற்கனவே தமிழின விரோதியான றிசாத்தை அமைச்சரவையிலை சேர்க்காதேங்கோ எண்டு அடம்பிடிச்சதையும் மைத்திரி காதிலை வாங்கிக் கொள்ளேல்லை. போதாததுக்கு எங்கடை பனையையும் எடுக்க வெளிக்கிடுகிறார். நாங்கள் விடுவமே எண்டு கூட்டமைப்பு கச்சை கட்டிக் கொண்டு வெளிக்கிட்டுது. பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பதவியை தங்கடை ஒருத்தருக்கே வழங்க வேணும் எண்டு மைத்திரிக்கு அடுத்த தலையிடியைக் குடுத்திருக்கினை.

சுன்னாகத்திலை இருக்கிற அனல் மின் நிலையங்களை மூட வேணும். வடக்கிலை நிலை கொண்டிருக்கிற படையளை முற்றாக வெளியேற்ற வேணும். வலி.வடக்கு மற்றும் இராணுவத்தினர் வசமிருக்கிற காணியள் மக்களுக்கு வழங்கப்பட்டு அங்கை முழுமையாய் மக்கள் குடியேற வேணும். அரசியல் கைதியள் விடுவிக்கப்பட வேணும். தமிழர்கள் (எந்தத் தமிழர்?) ஏற்கக்கூடிய, சுயநிர்ணய உரிமை, தன்னாட்சி, தாயகக் கோட்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய தீர்வு காண வேணும்.... இப்பிடி பல நூறு கோரிக்கையள் வெட்ட வெட்டத் தழைக்கும் அசுரர்களாய் மைத்திரியைத் துளைக்கப் போகும் நிலையிலை புலி வாலைப் பிடிச்சிட்டமே எண்டு அவர் கவலைப் படுகிற சங்கதியள் நடக்கும் போலத்தான் நிலமையள் ஓடுது.

சிலவேளை அடுத்த எலெக்சன் அறிவிப்போடை இந்தத் தேனிலவு கசக்கும் பாருங்கோ! அதுக்குத்தான் வவுனியாவிலை அண்ணன் மாவை முத்தாய்ப்பு வச்சிருக்கிறார்.






# மிக விரைவாக வளர்ந்து வரும் யா/ஸ்கந்தவரோதய ஆரம்பப்பாடசாலை



**அதிபர்**
**வ.நந்தீஸ்வரன்**
BBA (Hons), Dip in Edu. MEd (Merit)
SLPS 2II

### அதிபரின் கருத்துரை

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வளர்ச்சி கருதி 2005ஆம் ஆண்டு அங்கு மீண்டும்* ஆரம்பப்பிரிவு உருவாக்கப்பட்டது. ஸ்கந்தவரோதயக் கல்லூரி இசுறு பாடசாலைத் திட்டத்தில் சேர்ந்த பொழுது அதன் ஆரம்பப்பிரிவு வலிகாமம் கல்வி வலயத்திலே உடுவில் கல்விக் கோட்டத்தில் 2010ஆம் ஆண்டு புதியதொரு ஆரம்பப்பாடசாலையாக யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப்பாடசாலை எனும் பெயரில் தோற்றம் பெற்றது. இப்பாடசாலையின் அடையாள இலக்கம் 1010034, தொகைமதிப்பு இலக்கம் 09494 ஆகும். இப்பாடசாலை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மேற்குப் புற நுழைவாயிலின் ஊடாகச் சென்று பாதையின் மேற்குப் புறமாக உள்ள பகுதியில் இயங்கிவருகின்றது. 2010ஆம் ஆண்டின் ஆரம்ப காலங்களில் மிகுந்த வளப்பற்றாக் குறையுடனும், நெருக்கடிகளுடனும் இயங்கி வந்த இப்பாடசாலை தனக்குத் தேவையான எல்லாவளங்களையும் விரைவாக தேடிக்கொண்டது. வலிகாமம் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா எமது பாடசாலையினை 5000 பாடசாலைகள் அபிவிருத்தித்திட்டத்தில் சேர்த்து 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து கவர்ச்சிகரமான பாடசாலையாக்க உதவினார். ஸ்கந்த சமூகமும் தாராளமாக இப்பாடசாலை வளர்ச்சிக்கு உதவியுள்ளது.

2013ஆம் ஆண்டு எமது பாடசாலை மாணவர்கள் சிறுவர் அரங்கு நாடகப் போட்டியில் மகாண மட்டத்தில் 2ஆம் இடம்பெற்றனர். 2014ஆம் ஆண்டு தமிழ்த்தின பேச்சுப்போட்டி, சிங்கள வினா விடை போட்டி, வாய்ப்பாடு மனனப் போட்டி, என்பவற்றில் வலயமட்டத்தில் முதலாம் இடம் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்ந்தனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்

| | | | |
|---|---|---|---|
| 2010 | - 5 மாணவர்கள் | 54 | : 5 |
| 2011 | - 12 மாணவர்கள் | 61 | : 12 |
| 2012 | - 10 மாணவர்கள் | 64 | : 10 |
| 2013 | - 12 மாணவர்கள் | 62 | : 12 |
| 2014 | - 14 மாணவர்கள் | 62 | : 14 |

வெட்டுப்புள்ளிக்கு மேற் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்ந்தனர். மிகக் குறுகிய காலத்தில் இப்பாடசாலைக்கு உதவிய அத்தனை தரப்பினருக்கும் நன்றிகள் எமது மழலைச் செல்வங்களின் பாட இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பெருமையுடைய எல்லாம்வல்ல ஸ்கந்தப்பெருமானை வேண்டுகின்றோம்.




உப அதிபர்
செல்வி வை.சாவித்திரி
Spl.Trd.Primary

**வலிகாம கல்வி வலயத்தால் சிறந்த கற்பித்தல் செயற்பாட்டுக்கான சாதனையாளர் விருதினை வழங்கி 2014-ல் கௌரவிக்கப்பட்ட ஆசிரியர்**



**சிங்கள எழுத்து வலயமட்டம் முதலாம் இடம் 2013 செல்வி.த.தனுரா**




**2012இல் ஆங்கில சொல்வதெழுதல் வலயமட்டம் 1ஆம் இடம் பெற்ற மாணவி. செல்வி இ.ஜதுசாயினி**



**உயர் புள்ளி பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவி.**
**பா.சானுஜா - 183**
**2011**



**செல்வி.ம.ரம்மியா**
**பண்ணிசைப் போட்டி வலய மட்டம் முதலாம் இடம் 2013 பல்துறையில் பிரகாசித்த மாணவி**




**2014இல் தமிழ்மொழித்தின பேச்சுப் போட்டி வலயமட்டத்தில் 1ஆம் இடம் பெற்று மாகாண மட்டத்தில் பங்கு பற்றிய மாணவி**
**செல்வி கே. டிலானி**



**2014இல் சிங்கள வினாடிவினா வலயமட்டம் 1ஆம் இடம் பெற்ற தரம் 5 மாணவக்குழு**



ஆசிரியர் குழாம்



**2014இல் துரித கணித செய்கைப் போட்டி வலயமட்டத்தில் 2ஆம் இடம் பெற்று மாகாணமட்டத்தில் பங்கு பற்றிய மாணவன்**
**செல்வன் ம.கஜன்**

# வலி.தென்மேற்கு திட்ட முன்மொழிவுகள் ஜனாதிபதியிடம் மகஜர் கையளிப்பு

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளரினால் தயாரிக்கப்பட்ட 2015 -2016 ஆம் ஆண்டின் அபிவிருத்திக்காக 450 மில்லியன் ரூபாவுக்கான திட்ட முன்மொழிவுகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கைகளில் நேரடியாக வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடுதழுவிய ரீதியில் உள்ளூராட்சி மன்ற தலைவர்களை சந்திக்கும் மாநாடு கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இடம் பெற்றது.

இதில் வடக்கின் சார்பில் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் சி.சி.மகேந்திரன் கலந்து கொண்டு விளக்குகையில்:

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 41 பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

ஆனால் மேற்படி பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் வழங்கக் கூடியதாக நீர்நிலைகளோ அன்றி நன்னீர் கிணறுகளோ இல்லை.மேலும் போதுமான லொறி பவுஷர், டிராக்டர் பவுஷர், குடிதண்ணீர்த் தாங்கிகள் மற்றும் போதுமான ஆளணிகள் இல்லாது உள்ளன.

எனவே குடிதண்ணீர் வழங்க முடியாத நிலையில் உள்ளேன் எனவும்.

வலி.தென்மேற்கின் அபிவிருத்திக்காக 450 மில்லியன் ரூபாவுக்கான கீழ்வரும் திட்டங்களை மகஜர்களாக வழங்குகின்றேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

2015 - 2016 ஆகிய ஆண்டுகளில் நிதி ஒதுக்கி அபிவிருத்திக்கு உதவுமாறு கோரி தவிசாளர் சி.சி.மகேந்திரன் கையளித்தார்.

மேற்படி திட்டங்களின் விபரம் வருமாறு:

மாதகல் உப.அலுவலகத்திற்கான நவீன கட்டடம், டபிள் கப் வாகனம், கலாசார மண்டபம் நவீன வடிவில் மீள்புனரமைப்பு, ஒவ்வொன்றும் ஒரு கிலோ மீற்றர் நீளமான 28 வீதிகள் மீள்புனரமைப்புச் செய்தல்; (ஒரு கிராம அலுவலர் பிரிவிற்கு ஒரு வீதி),

பண்.பிரான்பற்று மற்றும் நவாலி பிரதேசத்திற்கு பொது நோக்கு மண்டபம்.

மானிப்பாய் பிரதேசத்திற்கான கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை உள்ளிட்ட திட்டங்களை நேரில் கையளித்துள்ளார். (92)

# 'நீயின்றி எமக்கேது வாழ்வு' நூல் வெளியீட்டு விழா

கலாபூஷணம் கண.எதிர்வீரசிங்கத்தின் "நீயின்றி எமக்கேது வாழ்வு" நூல் வெளியீட்டு விழா வடமராட்சி வதிரி பூவற்கரை விநாயகராலய மண்டபத்தில் கடந்த 18ஆம் திகதி நடைபெற்றது.

அருட்பாடல்களின் தொகுப்பான இந்நூலின் வெளியீட்டு விழாவுக்கு அல்வாய் கிராம சேவை உத்தியோகத்தர் ரீ.வரதராஜன் தலைமைதாங்கினார்.

இவ்விழாவுக்கான ஆசியுரையை வதிரி பூவற்கரை விநாயகராலய பிரதம குரு.சிவஸ்ரீ வை.இராஜேஸ்வரக்குருக்கள், முகாமையாளர் எஸ். கே. லோகநாதன் ஆகியோர் நிகழ்த்த வரவேற்புரையை எஸ். கணேசன் நிகழ்த்தினார் வல்வெட்டித்துறை தபால் அதிபர் ஏ.அருளானந்தசோதி வாழ்த்துரை வழங்கினார்.


வடக்கு மாகாண கல்வியமைச்சுச் செயலாளர் எஸ். சத்திய சீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு "நீயின்றி எமக்கேதுவாழ்வு" நூலைச் சம்பிரதாயபூர்வமாக வெளியிட்டு வைத்தார்.

விழாவிலே பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் இ.த.ஜெயசீலன் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டார் நூல் அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர் இராஜேஸ்கண்ணாவும், வெளியீட்டுரையை யாழ் பல்கலைக்கழக அரச அறிவியல் துறை விரிவுரையாளர் ரி.விக்னேஸ்வரனும் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை திருமதி அன்னலட்சுமி சத்திய நாதன் பெற்றுக்கொண்டார். எழுத்தாளர் ரீ. அஜந்தகுமார் நூல் நயப்புரை வழங்கினார்.

நூலாசிரியர் கண.எதிர்வீரசிங்கம் ஏற்புரை நிகழ்த்தினார். (01)

## வெள்ளி நற்சிந்தனை...



## பெற்றோரும் பிள்ளைகளும் - 02

ஒரு சந்நியாசி இரு கிளிகளை வைத்திருந்தார். அவர் பறவை போல் சஞ்சாரம் புரிபவர். ஆதலால். ஒரு கிளிளை உத்தமமான ஒரு வேளாளனிடம் கொடுத்தார். மற்றொரு கிளிளை ஒரு புலால் கடைக்காரனிடம் கொடுத்தார்.

சில நாட்களிற்குப் பின் அத்துறவியார் வேளாளனின் வீட்டுக்குச் சென்றார் அங்கு கூண்டில் வளர்ந்த கிளி "ஐயா! வருங்கள்: இருங்கள்: பால் வேண்டுமா? உங்கள் வரவு நல்வரவு. நீங்கள் வருவதற்கு நாங்கள் என்ன புண்ணியஞ் செய்தோமோ" என்று கூறியது. மறுநாள் இந்தப் புலால்காரனிடம் போனார் அங்கு கூண்டில்இருந்த கிளி அடி. வெட்டு. பிடி. போடா. மடையா என்று கூறியது.

சந்நியாசி இதனைக் கேட்டார். இரு கிளிகளும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தவையே! ஆனால். விருந்தினரை உபசரிக்கின்ற உத்தமன் வீட்டுக்கிளி இனிய உரைகள் கூறிற்று: புலால் கடைக்காரனிடம் வளர்ந்த கிளி கர்ண கடூரமாக கொடுமொழிகளைக் கூறியது. வளர்க்கின்றவர்களின் குணமும். குற்றமும் கிளிகளிடம் எதிரொலியாக ஒலிக்கின்றன. என்று கருதினார்.

ஆதலால் மக்களை எந்த முறையில் நாம் பழக்குகின்றோமோ அதற்கு ஏற்றவாறு தான் மக்களின் குணம் அமைகின்றது.

சில தாய்மார் தம் அருமைக் குழந்தைகளைப் பார்த்து, ராஜா! மாமா முகம் எப்படியிருக்கின்றது? மாமாவை எந்தக் காலால் உதைப்பது? என்றெல்லாம் கேட்கும்போது, அக்குழந்தை முகத்தைக் கோணலாக வைத்தும், கால் நீட்டியும் காட்டினால் மகிழ்ச்சியடைகின்றாள். இவ்வண்ணம் தம் மக்களை இளமையில் கோணலான பாதையில் வளர்ப்பது தவறாகும்.

"கண்ணா அண்ணாவைக் கும்பிடு வேலும் மயிலும் என்று சொல்லு. சுவாமி கும்பிடுவது எப்படி?" என்று கூறி நற்குணசீலராக வளர்க்க வேண்டும் சமயம் வந்த போதெல்லாம். நீதி நெறி நிறைந்த சிறுகதைகளைச் சொல்லி அந்த இளம் உள்ளத்தில் நன்நெறி விதைகளைத் தூவவேண்டும். மக்கள் தான் எதிர்காலத்து அரும் பெரும் செல்வங்கள்.

அண்மையில் ஆரம்ப பாடசாலையில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்று மிகவும் வேதனை தந்தது. தரம் மூன்றில் கல்வி பயிலும் மாணவன் ஒருவன். தனது வகுப்பில் படிக்கும் மாணவியை (சிறுமியை) தகாத வார்த்தைகளினால் திட்டித் தலைமயிரைப் பிடித்து அடித்திருக்கிறான். வகுப்பாசிரியை இருவரையும் பிடித்து நடந்த நிகழ்வைக் கூறி அதிபரிடம் ஒப்படைத்திருக்கிறார். குறித்த மாணவன் சரளமாக தகாத வார்த்தைகள் பேசுவான் என்பது தெரியவந்துள்ளது. அதிபர். மாணவனை அன்பாக நடாத்தி நீ பேசும் இந்த வார்த்தைகளை உனக்குச் சொலித் தந்தது. யாா? என்று கேட்டார். அந்தச் சிறுவன் தனது அப்பா. அம்மாவை தலைமயிரைப் பிடித்து அடிக்கும் கதையைக் கூறியிருக்கிறான். "சிறுவர் மனதில் நஞ்சை விதைக்கும் பெற்றோர் திருந்தியாக வேண்டும்" அதிபர் அந்தப் பெற்றோரை அழைத்துப் பேசியிருக்கிறார். அந்தத்தந்தை, "சின்ன வயதிலேயே இப்படியா செய்தான்" என்று பிள்ளையை அடிக்க கை ஓங்கி இருக்கிறார். பண்பான பெற்றோர்களாக பிள்ளைகளை நன்னெறியில் பொறுப்புடன் வளர்த்து வீட்டிற்கும். நாட்டிற்கும் நல்ல மக்களை உருவாக்க வேண்டும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிருக்கப் பெட்டகம்

நம்முடைய சமுதாயம் என்றைக்கு நீதியாக வாழ்ந்ததென்று சொல்கிறீர்கள்? அசோகனின் அப்பன் பிந்துசாரன் இருந்தான் பாருங்கள் அவனும் புத்தனும் நண்பர்கள். அப்படி இருந்தும் அசோகன் தொடர்ந்து கொலை செய்து கொண்டே வருகிறானே? எங்கே நீதியாக இருந்தது நம் சமூகம்? நாடு முழுவதும் எப்போது பார்த்தாலும் போராட்டம்?. "இவன்" அவனை வெட்டுவது. "அவன்" இவனை வெட்டுவது. அந்தக் காலத்திலிருந்து இன்று வரைக்கும் அதைத்தானே செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக. நீதி என்ற ஒன்று வரவேண்டுமென்றால், அது இனிமேல்தான் வர வேண்டும். ராஜராஜசோழன் காலத்தில் தண்டனை இது :

மழை பெய்யவில்லை. பூமி விளையவில்லை என்று வைத்து கொள்ளுங்கள். என்ன செய்வார்களென்றால் குடிசையில் இருக்கின்ற வெண்கலப் பாத்திரங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு குடிசைக்குத் தீயை வைத்து விட்டு அவனுக்கு சிவ துரோகி என்று பட்டம் கட்டி நாடு கடத்திவிடுவார்கள். இது தஞ்சைப் பெரிய கோயிலின் கல்வெட்டில் எழுதி இருக்கிறது. நிலத்தையெல்லாம் சிவனின் சொத்தாக எழுதி வைத்துவிட்டார்கள். குத்தகை கொடுக்கவில்லை என்றால் சிவனுக்குத் துரோகம் செய்துவிட்டதாக அர்த்தம். சிவனுக்குத் துரோகம் செய்தவனுக்கு தண்டனை என்னவென்றால், "மண் கலம் உடைத்து பொன் கலம் எடுத்து குடிசைக்கு தீ வைத்து சிவதுரோகி பட்டம் சூட்டி நாடு கடத்துதல்" இதுதான் தண்டனை. அப்போ என்றைக்கு நீதி இருந்திருக்கிறது? **– நம்மாழ்வார்**

நாம் நவீன காலத்தில் வாழ்கிறோமே தவிர நம் சிந்தனைகளில் நவீனமாக இருக்கிறோமா? சங்க இலக்கியத்தைப் படித்துப் பாருங்கள். அதில் எங்கே பழமை உள்ளது? ஆண் பரத்தை வீட்டுக்குப் போய் வருவது, அதைத் தலைவி சகித்துக் கொள்வது போன்ற ஒருசில விஷயங்களைத் தவிர சங்க இலக்கியத்தில் எதுவுமே எனக்குப் பழசாகத் தெரியவில்லை. யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்று ஒரு சங்கக் கவிஞன் பாடினான்.

நமக்கு அந்தத் தெளிவு இருக்கிறதா? தமிழ் மொழியைப் போல் இனிமையான மொழி உலகிலேயே இல்லை என்கிறோம். இது எவ்வளவு பெரிய பொய்? இதையே நீங்கள் கொஞ்சம் விரித்துச் செல்லுங்கள். என் தேசத்தைப் போன்ற நல்ல தேசம் வேறு எதுவும் கிடையாது. என் கடவுளைப் போல் சிறந்த கடவுள் வேறு எதுவும் கிடையாது. மற்ற மனிதனையும் அவனுடைய கடவுளையும் மொழியையும் கலாச்சாரத்தையும் கணக்கிலேயே எடுத்துக் கொள்ளாத ஃபாசிசச் சிந்தனையை நமக்குள் வைத்துக் கொண்டு நாம் நவீன காலத்தில் வாழ்வதாகப் பீற்றிக் கொண்டிருக்கிறோம்.

உண்மையில் நம் மனதில் இயங்குவது காட்டுமிராண்டிச் சமூகத்தின் மனநிலை. வேற்று மனிதனைக் கண்டாலே கொன்று விடுவான் அந்தக் காட்டுவாசி. நாமும் அந்த மனநிலையில்தான் வாழ்கிறோம்.

ஏன். ஃப்ரெஞ்ச், அரபி, ஸ்பானிஷ், உருது போன்ற மொழிகளெல்லாம் இனிமையான மொழிகள் இல்லையா? உண்மையில் இந்த மொழிகள் தமிழை விட இனிமையானவை. தமிழின் சிறப்பு அதன் ஞான மரபிலும் இலக்கிய மரபிலும்தான் இருக்கிறது. அந்த வகையில் தமிழுக்குக் கிட்டத்தில் வரும் மொழிகள் உலக அளவில் குறைவு. மற்றபடி இனிமை என்பதெல்லாம் கப்ஸா. தகர டப்பாவில் கூழாங்கல்லைப் போட்டு உருட்டுவது போல் இருக்கிறது என்று வட இந்தியாவில் சொல்கிறார்கள்.

தீவிரமாக யோசித்தால், பழமை என்று சொல்வதை நிலப்பிரபுத்துவ காலம் என்றே புரிந்துகொள்ள வேண்டும். அதையும் தாண்டிக் கொஞ்சம் பின்னோக்கிச் செல்லுங்கள். மிக அற்புதமான ஒரு உலகம் தெரியும். அங்கேயும் கவிஞர்கள் பிச்சைதான் எடுத்தார்கள். ஆனால் அதோடு கூட தமிழன் இயற்கையோடு எந்த அளவுக்கு உறவாடி வாழ்ந்திருக்கிறான் என்பது புரியும். விருட்சங்களையும் வனத்தையும் வாழ்த்தியவன், பூமியைப் பூசித்தவன், காற்றின் மொழி புரிந்தவன் அந்த மனிதன். ஆனால் நவீன மனிதன் எந்திரங்களிடம் அடிமை ஆகி விட்டவன். இந்த மனிதனின் பேராசையில விருட்சங்கள் வீழ்ந்து விட்டன. நதிகள் மரணிக்கின்றன. காற்று நச்சாகி, பூமியும் கசந்து விட்டது.

ஆக, சிந்தனையில்தான் நவீனம் இருக்கிறது. காலத்தில் இல்லை. **– சாரு நிவேதிதா**

# குற்றச்சாட்டுக்களை நிருபித்தால் அரசியலிலிருந்து ஓய்வுபெறுவேன்

## முன்னாள் கல்வியமைச்சர் சவால்

(கொழும்பு)

தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை நிருபித்தால் அரசியலிலிருந்து ஓய்வு பெறுவேன் என முன்னாள் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இந்தத் தகவலை அறிவித்தார்.



மகிந்தோதய தொழில்நுட்பக் கல்லூரி கட்டுமானப் பணிகள் மூலம் பெருந்தொகையான பணம் மோசடி செய்யப்பட்டதாக முன்வைக்கும் குற்றச்சாட்டு அடிப்படையற்றது.

என்னை மோசடிக்காரன் என கல்வியமைச்சர் குறிப்பிட்டமை முற்றிலும் உண்மைக்குப் புறப்பானது. இதனை அவர் நிருபிக்க வேண்டும். அவ்வாறு நிருபித்தால் மக்கள் மத்தியில் பொது மன்னிப்புக் கோரி அரசியலிலிருந்து விடைபெறுவேன்

தமக்கெதிராக சுமத்தியுள்ள பொய்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் மானநஷ்ட வழக்குத் தொடரப்போவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்கும் நடவழிக்கை இரத்து

(கொழும்பு)

அரசியல்வாதிகள், முக்கியஸ்தர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்களின் தொலைபேசிகள் ஒட்டுக் கேட்டும் நடவடிக்கை இரத்து செய்யகப்பட்டுள்ளது.

கடந்த அரசின் காலத்தில் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்பது தொடர்பில் நிபுணத்துவ அறிவு கொண்ட பாதுகாப்பு அதிகாரியொருவர் இதற்கு பொறுப்பாக கடமையாற்றி வந்தார்.

கைத்தொலைபேசிகள் வழியான உரையாடல்களும் ஒட்டுக் கேட்கப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைத்தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்க த்னியாக ஓர் பிரிவு உருவாக்கப்பட்டிருந்தது.

கொழும்பு கோட்டை பகுதியில் இரகசிய இடமொன்றில் இந்த தொலைபேசி ஒட்டுக் கேட்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

எனினும் புதிய அரசாங்கம் இந்த ஒட்டுக் கேட்கும் நடவடிக்கைகளை இரத்து செய்துள்ளது.

# பருத்தித்துறையில் விபத்து இரண்டுபேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை 1ஆம் கட்டைச் சந்தியில் கடந்த செவ்வாய்கிழமை மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் படுகாயம் அடைந்தநிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என பருத்தித்துறை பொலிஸார் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தெரிவித்தனர்.

கனயான் தோட்டம் புலோலி மத்தியைச் சேர்ந்த சிறீதரன் தனுஷ் (வயது20) துன்னாலை மத்தியைச் சேர்ந்த நாகராஜசர்மா உதயசங்கரசர்மா (வயது22) ஆகியோரே படுகாயம் அடைந்துள்ளனர். இவர்களில் சிறீதரன் தனுஷ் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையிலிருந்து மந்திகை நேக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் உள் வீதியிலிருந்து பிரதான வீதிக்கு துவிச்சக்கர வண்டியில் வந்தவர் நுழைந்தபோது இவ் விபத்து சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர்.

மேலதிக விசாரணையை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# தொழில் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

தொழிற்பயிற்சி அதிகார சபையின் வவுனியா அலுவலகத்தினால் பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாக வவுனியா, மன்னார் மாவட்ட உதவிப்பணிப்பாளர் ஆர்.பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


புதிய பயிற்சிநெறிகள் பகுதி நேரமாகவும் முழுநேரமாகவும் ஆரம்பிக்கப்படவுள்ளன. கீழ்வரும் பயிற்சிநெறிகளுக்கு, பாடசாலையை விட்டு விலகியவர்கள், தொழில் வாய்ப்பின்றியுள்ள இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்கமுடியும்.

2015ஆம் ஆண்டுக்கான பயிற்சிநெறிகளாக வைரவ புளியங்குளத்தில் கணனி மென்பொருள் தொழில்நுட்பவியலாளர், மின்னியலாளர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், குளிரூட்டலும் வாயு சீராக்கலும், காய்ச்சி இணைப்பாளர் பயிற்சிகளும், தோணிக்கல் நிலையத்தில் தோல் உற்பத்தியாளர், தையல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயிற்சிகளும், கோவில்குளம் நிலையத்தில் அழகுக்கலை, தையல், கணனி வன்பொருள் பயிற்சிகளும் , மதவு வைத்தகுளம் சென்சுலான் நிலையத்தில் கணனி கிராபிக் பயிற்சியும் செட்டிகுளம் நிலையத்தில் நீர்க்குழாய் பொருத்துநர், மின்னியலாளர், தச்சு வேலை பயிற்சிகளும், கல்மடு பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சியும், பூந்தோட்டம் நிலையத் தில் தச்சுவேலை, அலுமினியம் புனைபவர் பயிற்சிகளும் நடைபெறவுள்ளன.

எனவே, இதற்கான விண்ணப்பங்களையும் மேலதிக விபரங்களையும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல. 108 புகையிரத நிலைய வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கமுடியும். அல்லது 024 2221617 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொள்ளமுடியும் எனவும் அவர் கூறினார்.

இந்தப் பயிற்சிநெறிகளை நிறைவுசெய்வதன் ஊடாக (N.V.Q)மட்டத்திலான சான்றிதழை பெறமுடிவதுடன், அரச அங்கீகாரம் மிக்க பயிற்சிநெறியையும் நிறைவுசெய்ய முடியும்.

# பரமர் சங்கமம்



'சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேரா' தெண்டு பழைய மனிசர் கதைக் கிறவையள். அதுக்கு உலகப் பெரும் உதாரணமாக எங்கடை பொடியள் எடுத்த காவடியைக் காட்டலாம்.

வெண்ணை பொங்கி வரேக்கை தாழி உடைஞ்ச கதையாக எவ்வளாவோ பெரிசா வளந்து வந்தவையள் அடிப்படைப் புழையாலை எத்தனையோ பெரும் விலையைக் கொடுத்து இருந்தவையும் அழிச்சுதாங்களும் அழிஞ்சாங்கள்.

அதுபோலைதான் மகிந்தரும் அவங்களைப் போலை சிறுபுள்ளை விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தார். 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த யுத்தக் குற்றங்களை விசாரணை செய்ய ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை அமைப்பு சொல்லச் சொல்லக்கேளாமைக்கு சிறுபுள்ளை விளையாட்டைக் காட்டிக் கொண்டிருந்தார்.

அவங்கள் கடைசியா எச்சரிக்கை செய்யேக்கையும் கேககேல்லை. நல்ல காலம் ஜனாதிபதி தேர்தலில் தோத்தது. இல்லாட்டில் பிறகும் அந்த விளையாட்டைத்தானே காட்டியிருப்பார். ஐ.நா.சபை நேட்டோப்படைக்கு குடுத்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

இப்பவும் மைத்திரியர் அரசு வந்தும் விடேலல, மார்ச் மாதம வரை காலக்கெடு குடுத்திருக்கு. அரும் பொட்டிலை இலங்கையும் இலங்கையரும் தப்பிப் பிழைத்தம். அதை நினைக்கேக்கை தடக்கி விழுந்ததில் நீதியரசராகப் போன பீரிசின்ரை சேட்டையும் ஞாபகத்துக்கு வந்தது.

மைத்திரியர் ஆட்சி வந்தோடனை முன்னாள் ஜனாதிபதி நியமித்த பெரும் புளியளெல்லாம் நாயை விட்டுக் கழண்ட உண்ணியைப்போலை கழண்டு போக இன்னமும் ஒட்டிக் கொண்டிருந்து விலக மாட்டமெண்டு நிக்கிறார். உவற்றை பாடும் சிறுபுள்ளை வேளாண்மை விளையாட்டுப் போலதான் நடந்து கொண்டிருக்கு.

கடைசீலை செவியிலை பிடிச்சிழுத்துப் போய் கேற்றுக்கங்காலை விடுறகட்டம் வந்தாலும் வரும் போலை கிடக்கு. அவரைப் பதவி விட்டு விலகும்படி சொல்லுற சட்டத்தரணியள் சங்கம் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்போவதாகக் காட்டமாக நிக்குது. அதுவும் இல்லாமல் இலங்கை ஆட்சி முறை வரலாற்றில் இப்புடியொரு பிரதம நீதியரசர் யாருமே நடந்து கொள்ளவில்லையெண்டும் சொல்லப்பட்டிருக்கு.

நீதியரசர் ஒருவர் இப்புடி நடக்க சட்டத்தில் இடமிருக்கோ என்னவோ? அவருக்குச் சட்டாம் புள்ளையளா வேறுயாரும் பின்னணியில் இருக்கவும் கூடும். எது எப்புடியெண்டாலும் மாட்டுப்படப் போறவர் வேறையாளே!

வீம்புக்கு வேட்டையாடிய மகிந்தர் ஐ.நா.வுடன் நடத்திய விளையாட்டைத்தான் இவரும் பின்பற்றுற மாதிரியெல்லே இருக்கு பின்னை என்ன சொல்லுங்க பாப்பம்...

# நீண்டகாலமாக புனரமைக்கப்படாத கனகபுரம் - உருத்திரபுரம் வீதிப்பாலம்



கிளிநொச்சி மாவட்டத்தின் கனகபுரம் - உருத்திரபுரம் ஆகிய பிரதேசங்களை இணைக்கின்ற வீதியிலுள்ள பிரதான பாலம் நிதிப் பற்றாக்குறையால் இது வரை காலமும் புனரமைக்கப்படவில்லை எனவும் எதிர் காலத்தில் நிதி கிடைத்ததும் பாலம் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பா சனத்திணைக்களத்தினர் கூறியுள்ளனர்.

கிளிநொச்சி, கனகபுரத்தில் இருந்து உருத்திரபுரத்துக்கு செல்லும் பிரதான வீதியாகவும் இரண்டு கிராமங்களை ஒன்றோடு ஒன்று இணைக்கும் வீதியாகவும் உள்ள இந்த வீதியில் அமைந்துள்ள பாலம் கடந்த ஆண்டு இறுதியில் பெய்த கடும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு மிக ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. இந்தப் பாலம் மிக வும் பழமையானது. இப்பாலத்தை புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தங்கச் சாமியாருக்கு 48 இலட்சம் ரூபா அபராதம்

தங்கச் சாமியார் என்று அழைக்கப்படும் கண்டி கால்தென்ன காமி ஆணந்த என்ற பிரபல சாமியார் வருமான வரி கட்டவில்லை என்ற குற்றத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளையில் ஒரு மணி நேரத்தில் அபராதமாக 48 இலட்சம் ரூபாவைச் செலுத்தி சிறையிலிருந்து மீண்டுள்ளார்

கண்டி அம்பிட்டிய கால்தென்ன பத்திரகாளியம்மன் தேவஸ்தானத்தில் பிரபல சாமியாராக இருக்கும் இவர் காளி தேவதை அருள் கொண்டு அற்புதங்கள் மேற்கொள்பவராக ஒரு நம்பிக்கை நிலவுகிறது. இதன் காரணமாக இவரது ஆலயத்திற்குச் சென்று அநேகர் தங்கமாக தமது காணிக்கைகளைச் செலுத்துவர். உடலில் சுமார் 20 கிலோவிற்கு மேற்பட்ட எடைகொண்ட தங்கத்தை அணிந்து கொண்டு இவர் சர்வசாதாரணமாக வலம் வருவார்.

இவரில் மயங்கிய சில பெண்கள் தங்கள் கழுதகுகளிலிருந்த தங்கத் தாலிகளைக் கூட கழற்றி இவருக்கு போட்ட சம்பவங்களும் உண்டு.



இவருக்கு வருடாந்தம் கோடிக்கணக்கான வருமானம் வருகின்ற போதிலும், பல வருடங்களாக இவர் வருமான வரிசெலுத்தவில்லை எனக் குற்றம்சாட்டப்பட்டு தொடரப்பட்ட வழக்கில் கண்டி நீதவான் சிரிநித் விஜேசேக்கர, தங்கச்சாமியார் 48,86,840.00 ரூபாஅபராதத்தை விதித்ததுடன் அபராதத் தொகையை செலுத்தும் வரை சிறையிலடைக்குமாறும் உத்தரவிட்டார். எனினும் சாமியார் சுமார் ஒரு மணிநேரத்தில் அப்பணம் முழுவதையும் செலுத்தி விடுதலையாகியுள்ளார்.

48. சூரியன் மேற்கு வானில் மறைவது
   1) புவி தன்னைத் தானே சுழல்வதினால்
   2) சந்திரன் வருவதால்
   3) இரவான படியால்

49. ஆறுகுளம் வற்றிப் போவது
   1) மனிதர்கள் அதிகமான நீரைப் பயன்படுத்துவதால்
   2) நீர் ஆவியாகிப் போவதால்
   3) விவசாயத்துக்கு அதிக நீர் தேவைப்படுவதால்

50. சந்திரன் பிரகாசிப்பது
   1) சூரியனின் ஒளி படுவதால்
   2) சந்திரன் பூமியைச் சுற்றி வருவதால்
   3) பூரணை தினமாக இருப்பதால்

இல 51ஆம் 52ஆம் வினாக்களில் சில சம்பவங்கள் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. அவற்றினை ஒழுங்குபடுத்தும் போது வரும் விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

51. A பத்திரிகையில் எனது கட்டுரை வெளியாகியிருந்தது
   B நான் வாரப்பத்திரிகையில் வரும் சிறுவர் பகுதியினைத் தவறாது வாசிப்பேன்.
   C எனக்கும் பத்திரிகைக்கு ஏதாவது எழுத வேண்டும் என்ற ஆசைவந்தது
   D நான் மிகவும் மனம் மகிழ்ந்தேன்
   E எனது தாய்நாடு எனும் தலைப்பில் சிறு கட்டுரை ஒன்றை எழுதி பத்திரிகைக்கு அனுப்பி வைத்தேன்
   1) BECAD
   2) BCEAD
   3) BAECD

52. P நேற்று மாலையில் கடுமையான காற்று வீசியது
   Q வீழ்ந்த மரங்களை வெட்டும் பணியில் மக்கள் ஈடுபட்டிருந்தனர்
   R மரங்கள் பல முறிந்து பாதையில் வீழ்ந்திருந்தன
   S பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் தாமதித்தே செல்ல வேண்டி ஏற்பட்டது
   T அதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது
   1) PRTQS
   2) PSTQR
   3) PRQTS

### 28.01.2015 பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01). 1. 2   2. 2   3. 3   (02).4. 2   5. 1   6. 1   7. 1   8. 2   (03).9. 2   10. 1   11. 2
12. 3 13. 2   (05).14. 2   15. 1   16. 1   17. 3   18. 2   19. 2   20. 3   21. 1   22. 2   23. 3   24.1
25. 3   (06).26. 2   27. 1   28. 2   29. 3   30. o   31. 70   (08).32. 1   33. 3   34. 3
35.அவசரம்   (09).36. மாணவன்   37. வணக்கம்   38. சக்தி   39. ஆம்   (10). 40. நடுப்புள்ளிகளை இணைப்பதன் மூலம் சமமான முக்கோணிகளைப் பெற்று நிறுவுதல் அல்லது வேறு சரியான முறைகள்   (11). 41. 2
42. 1   43. 2

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



தரம் - 4 பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1மணி 15நிமிடம்


# கல்வி முரசு



முதலாவது சொல்லுக்கு எவ்வகையிலும் பொருத்தமற்ற சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக


01. விளையாட்டு மைதானம்   (1) சிறுவர்கள்   (2) புல்வெளி   (3) சித்திரம்
02. கற்கும் அறை   (1) புத்தகங்கள்   (2) மரம்   (3) விளக்கு
03. செய்திப்பத்திரிகை   (1) மணம்   (2) படம்   (3) எழுத்து

04. அருகிலுள்ள உருவை அவதானித்து மிகச்சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக





   (1). சிவப்புக் கொடியின் வலப்புறமாக சந்திரன் இல்லம் கூடாரம் அமைந்துள்ளது
   (2). நீலக்கொடிக்கு வலப்புறமாக நட்சத்திர இல்லம் கூடாரம் அமைந்துள்ளது
   (3). சிவப்பு,நீல கொடிகளுக்கு மத்தியில் நட்சத்திர இல்லம் கூடாரம் அமைந்துள்ளது.


பின்வரும் உருக்களிலுள்ள எண்கோலங்களை அவதானித்து வினாக்குறியிடப்பட்ட இடத்துக்கு வரவேண்டிய எண்ணைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக

05. 

(........................)

06. 

(........................)

07. 

(........................)

இல 08 - 11 வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (ச) எனவும், தவறாயின் (த) எனவும் அடைப்புக்கள் எழுதுக

08. கமலநாதன் எப்போதும் புகையிரதத்திலேயே வேலை விட்டு வீட்டுக்குத் திரும்புவார். நேற்று அவர் புகையிரத நிலையத்தை அடைந்த போது புகையிரதம் சென்றிருந்தது. ஆனாலும் அவர் வீடு வந்து சேர்ந்தார் (......)
09. எனது வகுப்பில் உள்ள எல்லோரும் என் நண்பர்கள், சியாம் எனது நண்பன் அல்ல அவனும் எனது வகுப்பிலேயே கல்வி கற்கிறான். (......)
10. எனது நண்பனான குமாருக்கு நான் கடிதம் ஒன்று எழுதினேன். ஆனால் அதைத் தபாலில் சேர்க்க மறந்து விட்டேன். குமாருக்கு இன்று ஒரு கடிதம் வந்ததாக அறிந்தேன் (......)
11. எனது தங்கை 2007ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி பிறந்தாள் (......)

பின்வரும் பந்தியில் இடம்பெற்றுள்ள விடயம் பூரணமாகுமாறு இடைவெளிக்குள் வர வேண்டிய சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக

குணதாசன் அக்கிராமத்திலுள்ள (12).................. ஒரு தச்சன் ஆவான். அவன் ஒவ்வொரு நாளும் (13)............ தனது கடமைக்காக (14) ............ வீட்டு வெளியேறுவான் (15) ............... கஷ்டப்பட்டுழைத்துப் பெறும் பணத்தால் (16)......... தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு திரும்புவான். இது அவனது (17) ...................... கடமையாகும்

12. 1ஆம் இடைவெளிக்குள் வரவேண்டிய சொல்
1) திறமையான 2) சோம்பலான 3) தைரியமான

13. 2ஆம் இடைவெளிக்குள் வரவேண்டிய சொல்
1) இரவில் 2) காலையில் 3) மாலையில்

14. 3ஆம் இடைவெளிக்குள் வரவேண்டிய சொல்
1) வேலைத்தளத்தை 2) வீட்டை 3) கடையை

15. 4ஆம் இடைவெளிக்குள் வரவேண்டிய சொல்
1) நாள் முழுவதும் 2) வாரம் முழுவதும் 3) மாதம் முழுவதும்

16. 5ஆம் இடைவெளிக்குள் வரவேண்டிய சொல்
1) கடைக்கு 2) வேலைத்தலத்துக்கு 3) வீட்டுக்கு


17. 6ஆம் இடைவெளிக்குள் வரவேண்டிய சொல்
1) நாளாந்த 2) மாதாந்த 3) வருடாந்த

சரியான முறையில் தொடர்புபடுத்தும் போது வரும் விடையின் எழுத்தை நடுவிலுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக

| | | |
|---|---|---|
| | | A - கொழும்பு |
| 18. மகாவலிகங்கை | (.....) | B - குமண |
| 19. பராக்கிரம சமுத்திரம் | (.....) | C - கட்டுநாயக்கா |
| 20. யானைகள் சரணாலயம் | (.....) | D - இரத்தமலானை |
| 21. பறவைகள் சரணாலயம் | (.....) | E - கண்டி |
| 22. பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையம் | (.....) | F - திருகோணமலை |
| 23. இயற்கைத்துறைமுகம் | (.....) | G - பொலன்னறுவை |
| | | H - பின்னவல |

பின்வரும் கோட்டுவரைபை அவதானித்து இல - 24 - 26 வரையிலான வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக

பாடசாலையொன்றில் ஒரு வாரத்தில் பாடசாலைக்கு வந்த மாணவர்கள் பற்றிய விபரம் வரைபில் உள்ளது




24. ஆண்பிள்ளைகள் குறைவாக வருகை தந்துள்ள தினம் எது?
1) செவ்வாய் 2) புதன் 3) வெள்ளி


25. பெண்பிள்ளைகள் கூடுதலாக வருகை தந்துள்ள தினம் எது?
1) செவ்வாய் 2) வெள்ளி 3) புதன்

26. பெண்பிள்ளைகள் சம எண்ணிக்கையில் வந்த இரு தினங்களும் எவை?
1) செவ்வாய், வியாழன் 2) திங்கள், புதன்
3) வியாழன், வெள்ளி

இல 27 - 28 வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களுக்கு அருகேயுள்ள சொற்கூட்டத்திலிருந்து பொருத்தமில்லாத சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

27.

1. பசுமை
2. இயற்கை
3. செலவு

28.

1. நேரம்
2. அறிவு
3. அளவு



பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக

29. மருந்து மூலிகைத் தாவரவகை ஒன்றின் பெயரை எழுதுக ..............................

30. பழங்களில் அதிகமாகக் காணப்படக்கூடிய விற்றமின் எது? ..............................

31. வானொலியை உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தவர் யார்? ..............................

32. இலங்கையின் நாணயத்துக்கு வழங்கப்படும் பெயர் யாது? ..............................

33. இலங்கையின் தேசிய மலர் எது? ..............................

34. இலங்கை நாணயத்தை வெளியிட அதிகாரம் பொருந்திய நிறுவனம் எது? ..............................

35. இலங்கையில் உள்ள மாகாணங்களின் எண்ணிக்கை யாது? ..............................


கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து இல 36 - 45 வரையான வினாக்களுக்கு விடை தருக

இரேசா திருஞானம் நான்காம் தரத்தில் கல்விகற்கும் ஒரு கெட்டிக்கார மாணவியாவார். இவருக்கு பரிமளா என்ற அக்காவும், செல்வா, ரமேஸ் என்ற இரு சகோதரர்களும் உள்ளனர். வலய கல்விப்பணிப்பாளரான திரு.மு.திருஞானம், நாமகள் கல்லூரி ஆசிரியையான திருமதி.சுசிலா திருஞானம் ஆகியோரின் அன்பு மகளான இவர், அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற பிரிவு ஒன்றுக்கான இசையும் அசையும் போட்டியில் முதலிடம் பெற்று, தான் கல்வி கற்கும், அரசடி ஈஸ்வரன் வித்தியாலயத்திற்கு புகழ் தேடித் தந்துள்ளார்.

இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான நபர் பற்றிய விபரங்களைக் கொண்டு தரப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துக

விண்ணப்பப்படிவம்

36. 1. முழுப்பெயர் : ..............................
37. 2. கல்வி கற்கும் பாடசாலை : ..............................
38. 3. கல்வி கற்கும் வகுப்பு : ..............................
39. 4. தந்தையின் பெயர் : ..............................
40. 5. தந்தையின் தொழில் : ..............................
41. 6. தாயாரின் பெயர் : ..............................
42. 7. தாயாரின் தொழில் : ..............................
43. 8. குடும்பத்திலுள்ள ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கை : ..............................
44. 9. குடும்பத்திலுள்ள பெண்பிள்ளைகளின் எண்ணிக்கை : ..............................
45. 10. விசேட ஈடுபாடுள்ள துறை : ..............................

46.


சிறுவன் ஒருவன் இரண்டு பலூன்களை ஊதி உருவில் உள்ளவாறு நேரான ஈர்க்கு ஒன்றின் நடுவில் கட்டி சமநிலையாகத் தொங்க விட்டான். சற்று நேரத்தில் ஒரு பலூனின் காற்றுப் போய் விட்டது. இதிலிருந்து எதிர்பார்க்கக் கூடிய அவதானிப்பு

1) A இருக்குமிடம் பலூன் B இருக்குமிடத்தை விட சிறிது உயரும்
2) பலூன் A இருக்குமிடம் பலூன் B இருக்குமிடத்தை விட சிறிது கீழிறங்கும்
3) எந்த மாற்றமும் ஏற்படாது

47. கடலில் அலை ஏற்படுவது
1) கடல் ஆழமாக இருப்பதால்
2) காற்றின் காரணமாக
3) கடலில் உப்பு அதிகமிருப்பதால்



யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த பிரித்தானிய வெளியுறவு அலுவலக அமைச்சர் ஹிகோ ஸ்வைர் யாழ்.பொது நூலகத்திற்கு சென்றவேளை அவர் வரவேற்கப்படுவதையும், பொது நூலகத்திற்கு பிரித்தானிய அரசினால் வழங்கப்பட்ட ஒரு தொகுதி நூல்களை பிரதம நூலகரிடம் வழங்குவதையும், அங்குள்ள நினைவுப் புத்தகத்தில் கையொப்பம் இடுவதையும் காணலாம். (படங்கள்: ஆர். இராஜகுமார்)

- கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள -

# காற்றாலை மின் திட்டங்களுக்கு 3.3 பில்லியன் ரூபா ஒதுக்கீடு



வடமாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வல்லிமுனை மற்றும் புலோப்பளை பிரதேசத்தில் இரண்டு காற்றாலை மின் திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கியினால் சுமார் 3.3 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டு புதிய காற்றாலைத் திட்டங்களின் மூலம் வருடாந்தம் 60 புறுா சக்தியினை பெற்றுக் கொள்ளமுடியும். அத்துடன் இதன மூலம் சுமார் 100,000 வீடுகளுக்கு மின்சாரத்தினை வழங்க முடியும். இதன் மூலம் வடமாகாணத்துக்கான பொருளாதார அபிவிருத்தியினை மேலும் பலப்படுத்த முடியும்.

சுமார் 30 வருடகால யுத்தத்திற்கு பின்னர் வடமாகாணத்தில் இவ்வாறானதொரு இரண்டு பாரிய திட்டங்களை முன்னெடுப்பதில் ஜூல் பவர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பெற்றா பவர் பிறைவேற் லிமிடெட் ஆகிய இரண்டு நிறுவனங்களும் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் பங்காற்றி வருகின்றன.

ஆரம்ப காலத்தில் இதற்குரிய கைத்தொழில் செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தன. இவ்விரண்டு அபிவிருத்தித் திட்டங்களும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை. இதற்குரிய கட்டுமானத்துக்கான நிதித்தொகையினை வழங்குவதன் மூலம் தேசிய அபிவிருத்தி வங்கி நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் அளப்பரிய பங்காற்றும் என்பதில் ஐயமில்லை. (85)

# கிழக்கை நோக்கி படையெடுக்கும் வெளிநாட்டுப் பறவைகள்



(யாழ்ப்பாணம்)

பருவ கால மாற்றம் காரணமாக கிழக்கு மாகாணத்தை நோக்கி வெளிநாட்டுப் பறவைகள் படையெடுக்க ஆரம்பித்துள்ளன. ஆயிரக் கணக்கான பறவைகள் தொடர்ந்தும் வருகை தருவதனை அவதானிக்க முடிவதாக அங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.


மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் குருக்கள்மடம்

பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதியில் பெருமளவிலான வெளிநாட்டு பறவைகள் தங்கியுள்ளதுடன், தற்போது அந்தப் பிரதேசம் பறவைகளின் சரணாலயமாக மாறியுள்ளது

அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளில் இருந்து வரும் பறவைகள் இனப்பெருக்கத்தில் ஈடுபட்டு குஞ்சுகளுடன் மீண்டும் பறந்துபோகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பறவைகள் சுமார் ஆறு மாதங்கள் வரை இங்கு தங் கியிருக்கும் என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், இந்தப் பறவைகளை காண்பதற்காக குறித்த வனப்பிரதேசத்திற்கு அதிகளவிலான மக்கள் வருகை தருவது குறிப்பிடத்தக்கது.

# சத்தியத்தை கிரகிப்பதில் தலைசிறந்தவர் காந்தி



நான் உயிரோடிருக்கும் போது உங்களில் சிலர் ஒளிவிட்டுப் பிர காசிக்கவில்லை யென்றாலும், என் மறைவுக்குப் பிறகு உலகம் உங்கள் தேஜலையும் ஆற்றலையும் உணரும் என்று காந்திஜி அவ்வப்போது தம் ஆசிரம வாசிகளுக்குச் சொல்வதுண்டு. காந்திஜியின் கணிப்பு விநோபாஜி விசயத்தில் முற்றிலும் உண்மையாகியிருந்தது.

காந்திஜியின் ஆன்மீக வாரிசான விநோபாஜிக்கு காந்திஜியின் மறைவின் பின்னர் பாரிய பொறுப்புக்கள் வந்து குவிந்தன. காந்திஜியின் நிர்மாணத் திட்டங்களை கவனிக்கின்ற பணியை விநோபாஜியே மேற்கொள்ள வேண்டியிருந்தது. இந்த விநோபரஜி பற்றி 1916 இல் காந்திஜி பின்வருமாறு குறிப்பிட்டார்.

"ஆசிரமத்திலுள்ள கிடைத்தற்கரிய மாணிக்கங்களில் இவர் ஒருவர். தம் சொந்த புண்ணிய பலத்தால் ஆசிரமத்தையே புனிதப்படுத்துபவர். பெறவந்தவரல்லர், தர வந்தவர் என்று விநோபாஜியைப் பற்றி காந்திஜி குறிப்பிட்டிருக்கின்றார்.

"கடவுள் தன் பெருங்கருணையாலே பாபுவின் திருவடிகளிலேயே என்னை நிலைத்திருக்கப் பண்ணி னார். பாபுவின் ஆசிரமத்திலிருந்து கிடைத்ததெல்லாம் என் மனதுக்கு மட்டும்தான் தெரியும். ஆசிரமத்திற்கு வந்த பின்தான் எனக்குப் பார்வையே கிட்டிற்று. பாபுவின் ஆசிரமம் எனக்குப் பார்வை அளித்த தாயகம்" என்கிறார் விநோபாஜி.

விநோபாஜி மகாத்மா காந்தியை முழுமையாகத் தரிசித்தவர். காந்தியின் ஆசி தவிர மற்றெல்லாம் சூனியமாகத் தெரிந்தது அவருக்கு. நீங்கள் ஒரு பெரும் சேவையின கருவி ஆவீர்கள் என்று காந்தி அவரை வாழ்த்தியிருக்கிறார்.

காந்தி ஒரு புரட்சிச் சிந்தனையாளர் எதிர்காலத்தை ஊடுருவி வெகுதூரம் பார்த்து அதற்கு வேண்டியவைகளைச் சிந்தித்து செயற்படுத்தும் திறன் அவரிடம் இருந் தது. அவர் புதுயுகத்திற்கு ஒத்ததாக சுயராஜ்யம் என்ற கருத்தை உருவாக்கினார்.

சுயராஜ்யக் குறிக்கோள் கைக்கெட்டிய பின் தன்னுடைய புதிய இலட்சியமாக சர்வோதயத்தை வரித்துக் கொண்டார். சர்வோதயம் என்றால் எல்லோருடையவும் உதயம். சர்வோதயச் சிந்தனையை செயலாக்குவதற்கு நாம் முயற்சி

**மகாத்மா காந்தியடிகளின் 67 ஆவது சிரார்த்ததினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. அதனையொட்டி இவ் ஆக்கம் பிரசுரமாகிறது.**

செய்ய வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

பொருளாதார ஏற்ற இறக்கங்கள், அதிகார வர்க்கத்தின் அடாவடித்தனங்கள், சுர்ண்டல் மற்றும் துஷ்பிரயோகங்கள் போன்றவற்றை எதிர்கொள்வதற்கு மாற்றுத்தளமொன்றை அமைக்கவேண்டிய தேவை ஏற்படும் போது அதற்கு காந்திய தத்துவமே அடித்தள்மாக அமையுமென்பது காந்தி வழி வந்த போராட்டங்களினால் எமக்குக் கிடைத்த பாடமாகும்.

காந்தியின் வழி யேசு அல்லது புத்தரின் வழியாகும். காந்தி போன்ற பெருந்தகையாளர்கள் காலத்தைக் கடந்தோர். குறுகிய காலநோக்கில் பணிசெய்வோர் அல்லர். அவர்கள் தொலைநோக்குடன் பணிசெய்பவர்கள்.

மனித இனம் சகல கட்டுக்களிலிருந்தும் விடுபட வேண்டுமானால் அதற்குத் தேவையானது சர்வோதய வேலைத்திட்டமே என காந்தி கூறுகிறார். காந்தியைப் போற்றுகின்றவர்கள் இந்த வேலைத்திட்டத்திற்கு தமது முழுமையான ஆதரவைத் தரவேண்டும். காந்தியச் சிந்தனை உயர வேண்டுமானால் அகிம்சையை ஆதாரமாகக் கொண்ட சமூக அமைப்பு தோன்ற வேண்டும்.

காந்தியின் தலைசிறந்த குணங்களில் ஒன்று அவர் சத்தியத்தைக் கிரகிப்பவராக (சத்தியாக்கிரகியாக) இருந்தார் எனபதேயாகும் அவர் எப்போதும் முன்னேற்றத்திலேயே நாட்டம் கொண்டவராக விளங்கினார். அவர் எப்போதும் புதிய புதிதாகக் கற்றுக்கொள்வதற்கு நாட்டங்கொண்டவராக விளங்கினார்.

நல்ல விடயங்களைக் குழந்தைகளிடமிருந்து கற்றுக கொள்ளவேண்டுமென அவர் கூறுகிறார். காந்தியை எல்லோரும் வழிகாட்டும் தலைவராக நினைத்தனர். ஆனால் காந்தியோ விட்டு விடுதலையாகி பற்றற்று நின்றார்.

மக் ஆர்தர் என்ற படைத்தலைவர், காந்தியின் மறைவை ஒட்டி அனுப்பிய இரங்கற் செய்தியில் "என்றாவது ஒரு நாள் காந்தியின் சொல்லை உலகம் பின்பற்ற வேண்டியிருக்கும். அதைத் தவிர வழியில்லை" என்று குறிப்பிட்டார். அத்றகுக் காரணம் உலகம் இன்று அணு ஆயுதப் போரில் முனைப்புக் காட்டுகின்றமையே ஆகும்.

- எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி
ஆசிரியர் காந்தீயம்

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA SRI LANKA
## FACUTLY OF ARTS

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mention posts.

Senior Professor/Professor of **Education/Economics/Geography**

**Senior** Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in **Education/ Home Economics/Media Studies** /Law/ * Translation Studies / Hindu **Civilization/Sanskrit**

* If no applicants for the post of Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Translation Studies with special **degree**/postgraduate degree in Translation Studies, persons who have special degree in English Literature/ English Language Teaching with I' or 2nd Upper Division and have an appropriate certificate in Fluent of Tamil Language could be considered for Lecturer (Probationary) in Translation Studies

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs. 67,100 -11 x 1425 - 82,775/- p.m |
| Professor | Rs, 56,505 - 13 x 1310 - 73,535/- p.m |
| Senior Lecturer Grade I | Rs. 45,545 - 7 x 1050 - 52,895/- p.m. |
| Senior Lecturer Grade II | Rs. 39,755 - 11 x 790 - 48,445/-p.m |
| Lecturer (Probationary) | Rs. 27,775 - 10 x 645 - 34,225/-p.m. |

**Note:**

In addition to the above salary, the following allowances will be paid:

i. Special allowance - 20% of the basis salary
ii. Additional monthly allowance 20%, of the basis salary
iii, interim Allowance Rs.3000/—
iv. Cost of living allowance of Ids. 7,800/- p.m.

Further the following allowances will be paid only be paid to Academic Staffs

i. Academic allowance -.

| | |
|---|---|
| Senior Lecturer Grade 1 /II | 85% |
| Lecturer (Probationary) | 65% |

ii, 35% Research allowance based on research activity

Statutory benefits:

(1) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Grade II and Senior Lecturer Grade 11
(2) Membership in **Universities** Provident Fund and Pension Scheme in the University system.
(3) Gratuity payments
(4) Employees' Trust Fund benefits,
(5) Free. Medical **Services**.

**Closing date,**

| | |
|---|---|
| **Post of Senior Professor/Professor** | - 27.03-2015 |
| Other posts | - 04.03.2015 |

Applications and other required documents for above posts shall be sent to the Deputy Registrar/Academic Establishments Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lnnke.

Application forms and other details may be obtained from the office of the **Deputy Pegistmr/ Academic Establishments**, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna together with a Self -addressed stamped envelope 23x1C c.m, in size,

Application forms and other details will also be available in the University website wwW,jfn.ac.1k. Those who wish to send the application forms downloaded from, the University website should attach a Money Order/ Postal Order for P:5.100/- drawn in favour of the Bursar, University of Jaffna.

Those who wish to apply for **more than one** post should apply in separate forms.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their qapplications through the Head of respective Institutions. Tilegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview,

**REGISTRAR**
UNIVEP,51TY OF *JAFFNA* SRI LANKA
2015,01,29 (C/3809)

## - ஏயர் ஏசியாவிமான விபத்து -
# சடலங்களை கண்டுபிடிக்க முடியவில்லை தவிக்கும் கடற்படையினர்

ஜாவா கடலில் மூழ்கி விபத்துக்குள்ளான ஏயர் ஏசிய விமானத்தில் 92 பேரின் சடலங்களை கண்டுபிடிக்க முடியவில்லை என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.



கடந்த டிசம்பர் 28ம் திகதி இந்தோனேஷியாவிலிருந்து சிங்கப்பூருக்கு 162 பயணிகளுடன் சென்ற QZ8501 விமானம் ஜாவா கடலில் விழுந்து விபத்துக்குள்ளானதில் அனைவரும் பலியாகியுள்ளனர்.

இதனையடுத்து நடந்த மீட்பு பணியில் இதுவரை விமான விபத்திலிருந்து 70 உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் 92 பேரின் உடல்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் கடலில் ஆழத்தில் சிக்கியுள்ள விமானத தின் உடல் பகுதியையும் மீட்க முடியவில்லை எனவும் கடற்படையினர் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இதுவரை மீட்பு பணியில் ஈடுபட்டு வந்த 81 பேர் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதால், தற்போது மீட்புப் பணி நிறுத்தப்பட்டிருப்பதாக இந்தோனேசிய கடற்படை வ்ட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**Allied Health Science Unit**
**Academic Programme**

The Academic Programme for the New Batch (9th) (2013 A/L) of Allied Health Science Students will commence on Monday 16th February 2015. An Inauguration Programme will be held on 16th February 2015 at 9.00 am in the Hoover Auditorium, Faculty of Medicine. The new students are requested to bring their parents (Mother & Father) or Guardian to the inauguration programme.

Registrar c/3810 28.01.2015

# UNIVERSITY OF JAFFNA
## FACULTY OF AGRICULTURF,
## ADMISSION OF PUBLIC OFFICERS
### FOR DEGREE PROGRAMME IN B.Sc AGRICULTURE (2013/2014)

Applications will be entertained by the *Dean, Faculty of Agriculture*, University of Jaffna for the Admission of Public Officers to follow the Degree Programme of B.Sc (Agriculture) as internal students for the Academic Year 2013/2014.

1. The applicant, should have passed the G.C.E A/L Examination in Biological Science and qualified to enter the *University*.

**OR**

Any other qualification, as may be approved by the Senate on the recommendation of the Faculty Board of Agriculture.

**AND**

2 Diploma in Agriculture (Course duration of not less than 2 years) obtained from any recognized institution.

3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Tcehnical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

**Age:** candidate should be less than 45 years at the time of closing date of applications.

Application forms may be obtained from the Assistant Registrar, Admissions Branch, University of Jaffna on a payment of Rs.100/- each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs. 100/- drawn in favour of the Bursar with self addressed envelope not less than 9" x 4" size and. stamp for **Rs.** 5.00.

Date of **closing** is 13th February 2015.

Applications should be forwarded through the relevant Heads of Department. Applications which are not *routed through the* proper channel will be rejected. Candidates will be called for a Written Test and an Oral Examination. No application will be entertained after the Closing date.

Registrar
29.01.2015 c/3811

# பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் யாழில் பல இடங்களுக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் ஹீகோஸ்வைர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு த்ரப்பினரையும் சந்தித்துள்ளார்.

நேற்றுக்காலை யாழ்.வந்த அமைச்சர் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை சந்தித்து கலந்துரையாடியதுடன் நண்பகல் 11 மணியளவில் யாழ். பொது நூலகத்திற்கு விஜயம் மேற்கொண்டு பெருமளவான நூல்களை அன்பளிப்புச் செய்தார். தொடர்ந்து முகமாலைப் பகுதிக்கு சென்ற வெளியுறவு அமைச்சர் பிரிட்டிஷ் கவுன்சிலுக்கும் விஜயம்மேற்கொண்டார்.

அத்துடன் நேற்று பிற்பகல் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமிற்கு சென்று அங்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அவர்களிடம் கேட்டறிந்து கொண்டதுடன் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்பு நோக்கி பயணமானார். இவ்விஜயத்தின் போது இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஜோன்ரன்கினும் கலந்து கொண்டிருந்தார்.

(இ)

## படைவசமுள்ள...

ரத்தின மேலும் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் வடமாகாணத்தில் இராணுவபிரசன்னத்தை குறைக்கும்,கடந்த அரசாங்கத்தை போன்று இராணுவநடவடிக்ககள் மூலமாக மாத்திரம் பயங்கரவாதத்தின் மீள் எழுச்சியை கட்டுப்படுத்தலாம் என இந்த அரசாங்கம் கருதவில்லை,

குறிப்பாக வடமாகாணத்தை பொறுத்தவரை அவ்வளவு பாதுகாப்பு நடவடிக்கைகளும் அவசியம் என நாங்கள் கருதவில்லை, வர்த்தக நடவடிக்கைகளுக்காக கைப்பற்றப்பட்ட நிலங்களை பொதுமக்களிடம் மீள வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்,

முன்னைய அரசாங்கம் எப்போதும் தோற்கடிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் மீள் எழுச்சி குறித்தே சிந்தித்துகொண்டிருந்தது.

இராணுவநடவடிக்கைகளால் மாத்திரம் அதனை தடுக்க முடியும் என நாங்கள் கருதவில்லை.

விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 275 தமிழர்களை விடுதலைசெய்வது குறித்து ஆராயந்துவருகின்றோம், அவர்கள் வெறுமனே சந்தேகத்தின் பெயரில்கைதுசெய்யப்பட்டவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை யுத்தக்குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு அனுமதியளிக்காது என குறிப்பிட்டுள்ள அமைச்சர் ராஜித சேனரத்தின,உள்நாட்டு விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.நா.வுடன்...

ஜயந்த தனபாலவின் இந்த விஜயம் ஒரு ஆய்வு பயணமாக அமைந்தது என்றும் புதிய ஜனாதிபதி மற்றும் அவரது அரசாங்கத்தின் கொள்கைகள் குறித்து விளக்கமளிக்கும் விஜயமாக இது அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டத்திற்கு அமைய ஐ.நா மற்றும் மனித உரிமை கவுன்ஸிலுடன் இணைந்து செயற்படத் தயார் என ஜயந்த தனபால ஐ.நா. மனித உரிமையாளர் நாயகத்திடம் எடுத்துரைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவும் இணைந்து செயற்படவும் இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளதாக ஜெனிவாவில் உள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆட்சியைக்...

காலை 3.10 மணிக்கு, தான் அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டதாக 26ஆம் திகதி இரகசிய பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்த சட்டமா அதிபர் யுவஞ்சன விஜேதிலக தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஸ, பிரதம நீதியரசர் மொஹான் பீலிஸ், உதய கம்மன்பில, ஜீ.எல்.பீரிஸ் மற்றும் லலித் வீரதுங்க ஆகியோர் அறையொன்றில் கதைத்துக் கொண்டிருந்ததாகவும் அவசர சட்டதிட்டம் போடுவது குறித்து ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க தன்னிடம் ஆலோசனை கேட்டதாகவும் சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்போது சொலிசிட்டர் ஜெனரல் பிம்பா திலகரத்னவிற்கு தொலைபேசி அழைப்பெடுத்து பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் குறித்து கலந்துரையாடியதாகவும் அதன்படி அவசர சட்டம் பிறக்கும் தருணங்கள் குறித்து லலித் வீரதுங்கவின் கேள்விகளுக்கு பதிலளித்ததாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

அங்கு பொலிஸ்மா அதிபர் மற்றும் இராணுவத் தளபதிகள் வந்ததாகவும் பொலிஸ் மா அதிபரை பார்த்து வர்க்கெண்ணும் நிலையம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் ஏதேனும் அசம்பாவிதங்கள் நடைபெற்றதா என வினவியதாகவும் சட்டமா அதிபர் கேட்டுள்ளார். பாதுகாப்பு தொடர்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை என பொலிஸ்மா அதிபர் பதிலளித்துள்ளார். ஜனாதிபதி தன்னை அழைத்த போது பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினை இல்லையேல் அவசர சட்டம் பிறப்பிக்க அவசியம் இல்லை என தெளிவுபடுத்தியதாக சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் மற்றும் அரசியல் வாதிகள் தொடர்ச்சியாக அரசியல் விடயம் தொடர்பில் கதைத்ததாகவும் அரச ஊழியர் மற்றும் சட்டமா அதிபர் என்ற அடிப்படையில் அவர்களுடன் தொடர்பு வைத திருக்க சட்டரீதியான அனுமதி இல்லை எனினும் தான் வேறு இடத்தில் இருந்ததாகவும் சட்டமா அதிபர் யுவஞ்சன விஜேதிலக தெரிவித்துள்ளார்

## சலுகைகள்...

பொறுப்பாகும்.

நல்ல எதிர்காலத்துக்காக மாற்றங்களை ஏற்படுத்துவோம்.

வென்றெடுத்த சுதந்திரத்தை பாதுகாப்பதே எங்கள் நோக்கமாகும்.

ஊழல் செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கும் வரை மக்கள் பொறுத்திருக்க வேண்டும்.

மக்கள் சேவையை மக்கள் சேவையாகவே கொண்டு நடத்துவதற்கு நாம் முன்னிற்போம்.

சீர்குலைந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை.

ஜனாதிபதி பதவியேற்புக்கு 6,000 ரூபாய் மட்டுமே செலவு.

அமைச்சரவையை 71 இலிருந்து 31ஆகக் குறைத்தோம்.

கடந்த வரவு - செலவுத்திட்டத்தில் 1,400 பில்லியன் ரூபாய், வரி வருமானமாக எதிர்பார்க்கப்பட்டது.

கடந்த வரவு - செலவுத்திட்டத்தின் பற்றாக்குறை 521 பில்லியன் ரூபாயாகும். இது மொத்த தேசிய உற்பத்தியின் 4.6 சதவீதமாகும்.

ஹெஜின் ஒப்பந்தமே நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்தது.

ஜனாதிபதியின் செலவு விவரங்கள்

2008ஆம் ஆண்டு - 634 கோடி ரூபாய்

2009ஆம் ஆண்டு - 765 கோடி ரூபாய்

2010ஆம் ஆண்டு - 5063 கோடி ரூபாய்

2011ஆம் ஆண்டு - 5,063 கோடி ரூபாய்

2012ஆம் ஆண்டு - 5,936 கோடி ரூபாய்

2013ஆம் ஆண்டு - 6,244 கோடி ரூபாய்

2014ஆம் ஆண்டு - 10,497 கோடி ரூபாய்

2015ஆம் ஆண்டு - 9,593 கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டிருந்தது.

தற்போதைய ஜனாதிபதியின் செலவு 290 கோடி ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை மாத்திரமே முன்னெடுப்போம்.

அரச ஊழியர்களின் சம்பளம் பெப்ரவரியில் 5,000 ரூபாவால் அதிகரிக்கப்படும். ஜூன் மாதம் முதல் இன்னும் 5,000 ரூபாய் அதிகரிக்கப்படும்.

கடந்த அரசாங்கம் பெற்ற கடனை இந்த அரசாங்கம் செலுத்தவேண்டியிருக்கிறது.

தனியார் துறையின் மாதாந்த சம்பளத்தை 2,500 ரூபாவால் அதிகரிக்க கவனம் செலுத்துமாறு கோரிக்கை.

100 நாட்கள் வேலைத்திட்டத்துக்கு தேவையான நிதியை திரட்ட வேண்டியுள்ளது.

கடந்த அரசாங்கத்தினால் அரசுக்கு 5,000 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டம்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கு மீன் ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஓய்வூதியக் கொடுப்பனவு 1,000 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

சமுர்த்திக் கொடுப்பனவு 100 சதவீதம் முதல் 200 சதவீதம் வரை அதிகரிக்கப்படும்.

புதிதாக பிறக்கும் குழந்தைகள் மற்றும் அவர்களின் தாய்மார்களுக்கு 2 வருடங்கள் வரை கொடுப்பனவு.

விவசாயிகள், வர்த்தக வங்கிகளுக்கு வழங்க வேண்டிய கடனில் 50 சதவீதம் தள்ளுபடி.

தேயிலை, இறப்பருக்கு நிவாரண விலை.

சிறிய ரக உழவு இயந்திரங்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொடுக்கப்படும்.

உரமானியம் தொடர்ந்து வழங்கப்படும்.

தூய பால் லீற்றரொன்றுக்கு 70 ரூபாய் நிவாரண விலை.

கொழும்பு நகரில் மீண்டும் குடியேறும் மக்களுக்கு நிவாரணம்.

நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்படும் நிதி 5 மில்லியனிலிருந்து 10 மில்லியனாக அதிகரிக்கப்படும்.

தயட்ட கிருலயில் ஊழல் மோசடி, அதை நிறுத்துவதற்கு யோசனை.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதம் கல்விக்காக ஒதுக்கப்படும்.

சிறுநீரக நோயாளிகளின் கொடுப்பனவுக்காக 2,000 மில்லியன் ஒதுக்கப்படும்.

சுகாதாரத்துறைக்கான செலவு 3 சதவீதத்தால் அதிகரிக்கும்.

வெளி நோயாளர் பிரிவு 24 மணிநேரமும் திறந்திருக்கும்.

மண்ணெண்ணெய் விலை லீற்றரொன்றுக்கு 6 ரூபாவால் குறைப்பு. தற்போதைய விலை 59 ரூபாய்.

அத்தியாவசியப் பொருட்கள் 13இன் விலைகள் குறைக்கப்படும்.

சீனியின் விலை 10 ரூபாவினால் குறைப்பு

400 கிலோகிராம் பால்மாவின் விலை 61 ரூபாவால் குறைப்பு

கோதுமை மாவின் விலை ரூ.12.50 குறைப்பு

நெத்தலி கருவாட்டுக்கு விதிக்கப்பட்டிருந்த வரி குறைக்கப்படும். இதன்மூலம் 15 ரூபாவால் குறைக்கப்படும். பாசிப்பயறு 1கிலோவின் விலை 30 ரூபாவால் குறைப்பு.

டின்மீன் விலை 60 ரூபாவால் குறைப்பு

கொத்தமல்லிக்கான விஷேட பண்ட வரி 30 ரூபாவால குறையும்.

உழுந்து கிலோவொன்று 60 ரூபாவால் குறையும்.

சமையல் எரிவாயுவின் விலை 300ரூபாவால் குறைப்பு.

மாசி கிலோவொன்று 200ரூபாவால் குறைப்பு.

அரசவங்கிகளில் ரூ.2லட்சத்துக்கு குறைவாக நகை அடகுவைத்திருப்பவர்களுக்கான வட்டி தள்ளுபடி.

அதிசொகுசுவாய்ந்த வீடுகளுக்கு வருடாந்தம் ஒரு மில்லியன் ரூபாய் இல்ல வரி.

இலங்கை பிரஜாவுரிமையை கைவிட்டு செல்கின்றவர்கள் கொண்டுசெல்லும் பணத்துக்கு 20 சதவீதம் வரி.

சொகுசு வீடுகளுக்கு ஒருதடவைமட்டும் வரி அறவிடப்படும்.

2,000 மில்லியன் ரூபாவுக்கு கூடுதலாக வருமானம் பெறுவோருக்கு 20 சதவீதம் வரி.

உற்பத்தியின் போது செலுத்தப்படும் ஆகக்குறைந்த வரிமட்டம் 750,000 வரை உயர்த்தப்படும்.

1,000 இயந்திரவலுவுக்கு குறைவான வாகனத்துக்கான வரி 15 சதவீதம் குறைப்பு.

சிமெந்து மற்றும் உருக்குக்கான தீர்வை குறைப்பு. இதன் மூலம் சிமெந்து மூடையொன்றின் விலை 90 ரூபாவால் குறையுமென எதிர்பார்ப்பு.

மோட்டார் வாகனங்களை சேகரிக்கும் நிறுவனங்கள் செலுத்தாத வரிகளை மீளப்பெற யோசனை. இதன் மூலம் 12,000 மில்லியன் வருமானம் எதிர்பார்ப்பு.

மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி சேகரிக்கும் நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய வரிக்கு தள்ளுபடி.

எதனோல் இறக்குமதியை கட்டுப்படுத்த சுங்க பிரிவுகளில் ஸ்கேன் இயந்திரம் பொருத்த நடவடிக்கை.

5,000 ரூபாவாக இருந்த திருமண மற்றும் பதிவுக் கட்டணம் 1,000 ரூபாவாக குறைப்பு.

25 சதவீதமாக இருந்த அலைபேசிகளுக்கான மீள்நிரப்பு அட்டைக்கான வரி குறைப்பு.

விளையாட்டு நிகழ்ச்சிகளை மட்டும் ஒளிபரப்பும் தொலைக்காட்சிகளுக்கு 1,000 மில்லியன் ரூபாய் வரி.

மதுபான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு விலைமனுக்கோரல். ஒருவருக்கு 3 அனுமதிப்பத்திரமே வழங்கப்படும். மதுபான அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணம் 2 மடங்காக அதிகரிக்கப்படும்.

அங்கவீனமடைந்த இராணுவவீரர்களுக்கு, ஆகக் குறைந்தது 5 இலட்ச ரூபாய் கடன்.

மஹாபொல புலமைப்பரிசில் 5,000 ரூபாவால் அதிகரிப்பு.

அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு 200 ரூபாய் கொடுப்பனவு.

ஸ்ரீலங்கன் மற்றும் மிஹின் லங்கா நிறுவனங்களின் நட்டத்தை நாட்டால் தாங்க முடியவில்லை. இவ்விரு நிறுவனங்களால் ஏற்பட்ட நட்டம் 100 பில்லியனை தாண்டிவிட்டது. ஆகையால் இவ்விரு நிறுவனங்களையும் இணைக்கின்றோம்.

சிரேஷ்ட பிரஜைகளுக்கான பஸ் கட்டணம் 50 சதவீதத்தால் குறைப்பு.

மீனவர்களுக்கு ஆயுட் காப்புறுதி.

முற்பணமின்றி வங்கிக்கணக்கு ஆரம்பிக்க நடவடிக்கை.

அரச நிறுவனங்கள் அரசசெலவில் விளம்பரம் செய்தல் நிறுத்தப்படவேண்டும்.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் பிரகாரம் நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால வரவு-செலவுத்திட்டமானது இருப்பவனிடமிருந்து பிடுங்கி இல்லாதவனுக்கு கொடுக்கும் திட்டமாகும் என்று பொருளாதார அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# மீன் இறக்குமதி தடை விரைவில் நீக்கப்படும்

## ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கையிலிருந்து மீன் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை விரைவில் விலக்கிக்கொள்வதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பிரசெல்ஸில் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சையடுத்து மேற்கண்டவாறு ஐரோப்பிய ஒன்றியம் உறுதியளித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

இரண்டு நாள் பயணமாக பெல்ஜியத்திற்கு சென்ற வெளிவிவகார அமைச்சர் மங்கள, அந்நாட்டின் பிரதிப் பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

அத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் சுற்றுச்சூழல் கடற்றொழில் விவகார ஆணையாளர் கார்மெனுவெல்லா மற்றும் சர்வதேச அபிவிருத்தி ஆணையாளர் நெவென் மிமிக்கா ஆகியோருடனும் சந்திப்புக்களை நடாத்தினார்.


இதன்போது பெல்ஜியம் மற்றும் ஐரோப்பிய யூனியனுடனான இலங்கையின் உறவுகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் சர்வதேச சட்டங்களின் படி மீன் பிடிக் கொள்கைகளின்படி மீன் பிடித்தல், தடைசெய்யப்பட்ட ஜி.எஸ்.பி வரிச்சலுகையை மீளப் பெறுவது தொடர்பாகவும் பேச்சு நடாத்தப்பட்டது.

இதன்போது மீன் இறக்குமதிக்கான தடையை விரைவில் நீக்குவதற்கு ஆவன செய்வதாக ஐரோப்பிய ஒன்றியம் உறுதியளித்துள்ளது.

அத்துடன் சமூக பொருளாதார மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இலங்கையுடன் உறவுகளை வலுப்படுத்தவும் ஐரோப்பிய ஒன்றியம் ஆர்வம் காட்டியுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது கடற்றொழில் அமைச்சின் செயலாளர் நிமால் ஹெட்டியாராச்சி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான முன்னாள் தூதுவர் அம்சா ஆகியோரும் உடனிருந்தனர்.

# இலங்கைக்கு ஆறுதல் வெற்றி



(வெலிங்டன்)

இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் வெலிங்டனில் நேற்று இடம்பெற்ற ஏழாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் இலங்கை அணி ஆறுதல் வெற்றியை பெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களின் நிதானமான ஆட்டம் காரணமாக இலங்கை அணி வலுவான ஓட்ட எண்ணிக்கையை பெற்றது. குமார் சங்கக்காரா ஆட்டமிழக்காமல் 113, திலகரட்ன டில்சான் 83 ஓட்டங்களையும் பெற்றனர். அதன்படி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 287 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்திருந்ததுடன் நியூசிலாந்துக்கு 288 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து முதலே தடுமாறி விக்கெட்டுக்களை பறிகொடுத்தது. 45.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 253ஓட்டங்களை மாத்திரம் பெற்று 35 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

மேலும் இந்தப் போட்டியில் குமார் சங்கக்காரா மற்றுமொரு சாதனையைப் பதிவு செய்தார். ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்களை குவித்த இலங்கையர் என்ற பெருமையையும் பதிவு செய்தார். 396 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய சங்கக்கார 13580 ஓட்டங்களை குவித்துள்ளார்.

இதேவேளை முன்னதாக இந்தச் சாதனையை சனத் ஜெயசூரியா தக்க வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. போட்டியின் ஆட்டநாயகனாக சங்கக்கார தெரிவானார்.

# வலி. வடக்கு மீள்குடிமயர்வு; சர்வ மதக் குழு கவலை



வலி. வடக்கு பகுதியில் இன்னும் ஏன் மக்கள் மீள்குடியமர்த்தப்படவில்லை. இந்த நிலை மன வருத்தத்தினை தருகின்றதாக மாத்தளையில் இருந்து யாழிற்கு விஜயம் மேற்கொண்ட சர்வமத குழுவினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை யாழிற்கு விஜயம் மேற்கொண்ட இக்குழுவினர் நேற்று யாழ் கிறீன் கிராஸ் விருந்தினர் விடுதியில் ஊடகவியலாளர்களை சந்தித்து கலந்துரையாடினார்கள்.

இச்சந்திப்பின் போது, வலி. வடக்கு பகுதியினை பார்வையிட்டனர். உயர்பாதுகாப்பு வலயமாக இருக்கும் வலி.வடக்கு பகுதி உள்ள வீடுகள் இடிக்கப்பட்டதை அவதானித்துள்ளனர்.

அத்துடன், யாழ். நாவாந்துறை பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட இவர்கள் கடந்த 7 வருடங்களுக்கு முன்னர் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இவர்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்களால் எடுத்துரைக்கப்பட்டது.

இந்த விடயங்களை ஆராய்ந்த இக்குழுவினர் யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைவரங்கள் பற்றி ஆராய்ந்தனர்.

அதேவேளை, வலி. வடக்கு பகுதியில் உள்ள ஆலயங்களில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கு தென்பகுதி ஊடகங்கள் மற்றும் பொது மக்களுடன் கலந்துரையாடி உரியவர்கள் மூலம் ஆலயங்களில் பூசை வழிபாடுகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்வதாகவும் சர்வமத குழுவினர் மேலும் தெரிவித்தனர். (25)

## வாள்வெட்டில் இருவர் படுகாயம்

வடமராட்சி கற்கோவளம் புனிதநகர் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மேற்படி பகுதியைச் சேர்ந்த நகுலன் சுயாதா (வயது - 28), சதீஸ் உசாந்தினி (வயது - 20) ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர்.

காணித்தகராறே இந்த வாள் வெட்டுச் சம்பவத்திற்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. குடத்தனையிலிருந்து வந்தவர்களே வாள்வெட்டில் ஈடுபட்டனர் என்றும் இவர்கள் தப்பிச்சென்று விட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. பருத்தித்துறை பொலிஸார் விசாரணை நடாத்தி வருகின்றனர். (18)

# விசேட சத்திர சிகிச்சை நிபுணர் நிமாலுக்கு எதிராக முறையீடு



(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிற்கு எதிராக விசேட சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் ரணில் ஜயசேன இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு ஒன்றை பதிவு செய்தார்.

விசேட சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் ரணில் ஜயசேன இதுபற்றித் தெரிவித்ததாவது,

நான் ராகமை வைத்தியசாலையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவராக செயற்பட்ட காலப்பகுதியில் டீ.எஸ்.எம். இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்ய அமைச்சர் வலியுறுத்துவதாக கதிர்வீச்சுப் பிரிவின் சத்திரசிகிச்சை வைத்தியர் என்னிடம் கூறினார்.

ராகம வைத்தியசாலைக்கு டீ.எஸ்.எம். இயந்திரம் ஒன்று தேவை இல்லை. ஆகவே, அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்றை ஸ்தாபித்துத் தருமாறு அமைச்சரிடம் கேட்குமாறு நான் கூறினேன்.

இதனைக் கூறியதனால் குறித்த வைத்தியரைக் கடுமையாக அமைச்சர் சாடினார். அத்துடன், பலவந்தமாக அந்த இயந்திரத்தை வைத்தியசாலையின் சுவர்களை உடைத்து உள்ளே கொண்டு வந்தனர். இதன் போது இங்கே பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

இதன் காரணமாக நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகளைக்கூட கொண்டு வருவதற்கு நிதி இல்லாமல் போனது. தரம் குறைந்த மருந்துகளையே மக்களுக்கு விநியோகிக்கும் நிலை ஏற்பட்டது. இதனால் எத்தனை பேர் உயிரிழந்தனர் என்று தெரியவில்லை என்றார்.

## பிரித்தானிய...

இடம்பெற்றுள்ள மாற்றங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கு அவர்கள் வருகை தந்தனர்.

புதிய அரசின் செயற்பாடுகள் பல விடயங்களில் நன்மை தருவதாக உள்ளது. குறிப்பாக ஆளுநர், பிரதம செயலர் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்று கூறினேன்.

இராணுவ வெளியேற்றம், சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளை மீளக் கையளித்தல் தொடர்பான பாரிய மாற்றங்கள் இடம்பெற வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தேன்.

வடக்கில் இருந்து இராணுவத்தை குறைப்பதில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளமையும் சுட்டிக்காட்டினேன்.

இவற்றை மீளளித்தால், அவற்றை என்ன செய்வீர்கள் என்று என்னிடம் வினவினார்கள்.

மீளக்குடியேறாத மக்களின் நிலைமைகளையும் அவர்களது சொந்த நிலங்களையே இராணுவத்தினர் சுவீகரித்து முகாம் அமைந்துள்ளனர் என்பதை நான் அவர்களுக்கு தெளிவுபடுத்தினேன்.

இது பாரிய மாற்றதை ஏற்படுத்துமா என்பது அவர்களது அடுத்த வினாவாக இருந்தது.

99 சதவீதமான தமிழ் பேசும் மக்கள் வடமாகாணத்தில் உள்ளனர். விகிதாசார அடிப்படையில் நாடாளுமன்றத்துக்கு சிங்களப் பிரதிநிதியை அனுப்பும் சூழ்நிலை உருவாகும் என்று அவர்களுக்கு தெரிவித்தேன்.

இதன் பின்னரே இதில் இவ்வளவு சிக்கலான பிரச்சினை உள்ளது என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர்.

வடமாகாணத்துக்கு கூட்டுறவுத்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான உதவிகளை வழங்குவது தொடர்பாக தாம் ஆராய்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட போது, எதிர்வரும் மார்ச் 26 ஆம் திகதி வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்ட ஐ.நாவின் விசாரணை அறிக்கை வெளியாவதில் தாமதம் ஏற்படலாம் என்ற அச்சம் மக்கள் மத்தியில் உள்ளதாக தெரிவித்தேன்.

இது பற்றி தான் அறிந்திருக்கவில்லை என்றும் பிரித்தானிய அமைச்சர் தெரிவித்தார் என்றும் முதலமைச்சர் கூறினார்.


## வாகனங்கள் விற்பனைக்கு

**பாவித்த நல்ல நிலையிலுள்ள வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.**

- ☆ டிப்பர் (6 சில்லு மற்றும் 10 சில்லு)
- ☆ கூலர்
- ☆ கன்ரர் (அலுமினிய பொடி)
- ☆ உழவு இயந்திரம்
- ☆ JCB பக்கோ

**தொடர்புகளுக்கு: S.K.சிவா**

**தொ.பே: 0779963339**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஜனவரி 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.